நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை
தோற்றம் - 14.09.1901

செந்தமிழ்

பகுதி: 6
தொகுதி: 113
திருவள்ளுவர் ஆண்டு 2050

திங்கள் இதழ்
விலை: ரூ.20
ஜூன் - 2019

நான்காம் தமிழ்ச்சங்க வெளியீடு

தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு

முகவை மன்னர் நா.குமரன்சேதுபதி	தலைவர்
மருத்துவர் ந.சேதுராமன்	துணைத் தலைவர்
வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி	செயலாளர்
திருமதி.இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி	உறுப்பினர்
முதுமுனைவர் இரா.இளங்குமரனார்	உறுப்பினர்
பொறிஞர் க.சி.அகமுடைநம்பி	உறுப்பினர்
வழக்குரைஞர் கே.ஆர்.என்.கருணாகரன்	உறுப்பினர்
திரு. அழ.சித்தையா	உறுப்பினர்
வழக்குரைஞர் ச.தசரதராமன்	உறுப்பினர்
திரு. துரை கருணாநிதி	உறுப்பினர்
திரு. வி.சத்யநாராயணன்	உறுப்பினர்

செந்தமிழ் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரி கல்லூரிக்குழு உறுப்பினர்கள்

வழக்குரைஞர் ச.தசரதராமன்	தலைவர்
திருமதி. இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி	செயலாளர்
வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி	உறுப்பினர்
பொறிஞர் க.சி.அகமுடைநம்பி	உறுப்பினர்
திரு. அழ.சித்தையா	உறுப்பினர்
திரு. வி.சத்யநாராயணன்	உறுப்பினர்
வழக்குரைஞர் து.மாயராசன்	உறுப்பினர்
வழக்குரைஞர் சு.சிவசாமி	உறுப்பினர்
பொறிஞர் ஸை.சிவக்குமார்	உறுப்பினர்
வழக்குரைஞர் ஆர்.பாலாஜி	உறுப்பினர்
திரு. ஜெ.பாலதண்டாயுதம்	உறுப்பினர்
முனைவர். ம.லெல்லிஸ்திவாகர் பல்கலைக்கழக நியமன	உறுப்பினர்
முனைவர். கி.வேணுகா முதல்வர் (பொ)	உறுப்பினர்
முனைவர். கோ.சுப்புலெட்சுமி துணை முதல்வர்	உறுப்பினர்
முனைவர். பா.நேருஜி உதவிப்பேராசிரியர்	உறுப்பினர்

பொருளடக்கம்

1. இதழ்மணம் 4

2. சங்கச் சான்றோர்க்குப் பெயர்சூட்டு விழா 6
   - முதுமுனைவர் இரா.இளங்குமரனார்

3. விபுலானந்தர் நோக்கில் திருக்குறள் 10
   - பேராசிரியர் ப.மருதநாயகம்

4. சொல்லியல் கோட்பாடு 26
   - பேராசிரியர் செ.வை.சண்முகம்

5. மொழி முதல் ஞகரம் 33
   - பேராசிரியர் இரா.கோதண்டராமன்

6. சங்கச் செய்திகள் 41

வலைத்தளம்

www.maduraitamilsangam.com
www.senthamilcollege.com

மின்னஞ்சல்

secretarymaduraifourthtamilsangam@maduraitamilsangam.com
maduraitamilsangam@yahoo.co.in
principalsenthamilcollege@yahoo.co.in

இதழ்க்கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்	ரூ. 200	ரூ. 1,000
ஆயுள்கட்டணம்	ரூ. 3,000	ரூ. 10,000
புரவலர் கட்டணம்	ரூ. 10,000	ரூ. 20,000
தனி இதழ்க்கட்டணம்	ரூ. 20	

இதழ் மணம்

சங்க இலக்கியங்கள் உ.வே.சாவின் அரிய முயற்சியால் நூல் வடிவம் பெற்றன. அதற்கு முன்பு பன்னெடுங் காலமாக அவற்றின் தோற்றமும் இயக்கமும் தமிழ் வரலாற்றில் ஆழ்ந்த சிந்தனைக்குரியதாகும். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அவற்றைப் பேணிப்பாதுகாத்து உலகுக்கு வழங்கிய தமிழ் மக்கள் வரலாறு வியப்புக்குரியதாகும். அகஇலக்கியம் உலகமாந்தர் அனைவருக்கும் பொது; அக இலக்கியம் தனியுரிமை பாராட்டப்பட முடியாத மாந்த இனமுழுவதற்குமுரிய பரிமானத்தை உடையது. நாடு, மொழி, சமயம் என்னும் பிரிவினைகளைக் கடந்து உள்ளத்தை உரிப்பொருளாகக் கொண்டு இயற்கையைப் பின்புலமாகக் காட்டி காலத்தையும் இடத்தையும் கடந்து நிற்கும் முதற்பொருளை பாடுபொருளாகப் படைத்த மக்கள் இலக்கியம், செவ்விலக்கியம்; சங்கப்பாக்களுக்கு உலகம் முழுவதும் உள்ள மக்கள் உறவும் உரிமையும் கொண்டு போற்றிக்கற்று இன்புறும் காலம் அனித்தோ? சேய்த்தோ? உலகம் தழுவிய அறிவியல் சிந்தனையுடைய பெரு மக்களும் அவர்களுடைய குழந்தைகளும் சங்க அகஇலக்கியப் பாடல்களை விரும்பிக் கற்பதற்கென்று தமிழ் படிக்கும் காலம் ஒன்று உண்டு. அறிவு இன்பம் தரும்; சங்கப் பாடல்கள் அறிவு ஊற்று; அதனால் உலகம் அவற்றைப் போற்றிப்பேணும் என்பதில் ஐயமில்லை.

சங்கப் பாடல்களைப் போற்றிப் பேணிய மக்கள் அவற்றைத் தொகுத்து இலக்கணம் கண்டு வாழையடி வாழையாக கற்றுப்பேணி பாதுகாத்தனர். இடையில் மாற்றார் கொடுமையால் தமிழ் மக்கள் வறுமையுற்று வயிற்றுப் பிழைப்பைத் தேடி அலைந்ததால் கற்கும் முயற்சி குன்றி இலக்கியங்கள் பரணியில் சிதிலமுற்றன. அவற்றைத் தேடி எடுத்து அச்சிட்டு வாழ்வு தந்த பெரு மக்களுக்கு அறிவு உலகம் என்றும் கட்டுப்பாடு உடையது.

பெயரறிய முடியாத கவிதைகளுக்குக் கவிதைகளின் மையப் பொருளை பொதிந்து அணிநலம் சிறக்க அமைந்த கவிதைத் தொடரைப் பாடிய புலவரின் பெயராக பெயர் சூட்டி மகிழ்ந்த நம் முன்னவர்களின் வியத்தகு கவிதை உணர்வை எண்ணி பேராசிரியர் இரா. இளங்குமரனார் அக்கவிதைகள்

குறித்த இலக்கிய இன்பத்தை நம்மோடு பகிர்ந்து கொள்கிறார். இந்த இதழில் அணிலாடு முன்றிலார் காதலனைப் பிரிந்த காதலியும் வெறிச்சோடிய உள்ளத்திற்கு ஆட்பேரு இல்லாத ஊரில் வீட்டு முற்றத்தில் அணில் மட்டுமே தெரியும் அவலம் புறக்காட்சியாகப் படைக்கப்பட்டுள்ளது. காதலன் இருந்த ஞான்று சாறுகொள்மன்றமாக இருந்த உள்ளம் இப்போது புல்லென்று புலம்பல் உற்ற அன்பின் மன ஏக்கமும், காதலும் அணிலாடுமுன்றில் என்னும் தொடரில் உருவகம் செய்திருப்பது நினைவில் நீங்காதது. பாடல் ஆசிரியர் அத்தொடரில் நீங்கா இடம் பெற்றிருப்பதை அறிந்த நம் முன்னோர் ஆசிரியர் பெயரைவிட தொடரே அவரை என்றும் நினைவுகூறத் தக்கதாக காட்சிப்படுத்தி இருப்பது இன்புறத்தக்கது, இதனைப் பெயர் சூட்டு விழாவாகவே போற்றலாம் என்னும் பேராசிரியர் இளங்குமரனார் தலைப்பு இன்புறத்தக்கது.

அடுத்து, "விபுலானந்தர் நோக்கில் திருக்குறள்" என்னும் தலைப்பில் பேராசிரியர் ப. மருதநாயகம் கட்டுரை இடம் பெறுகிறது. விபுலானந்த அடிகள் பெருந்துறவி: கலைஞர், கல்வியாளர், இசைக்கலைவித்தகர். அப்பெயரியார் ஆங்கிலத்தில் எழுதிய ஆய்வுரைகளைப் பேராசிரியர் மருதநாயகம் தமிழ் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறார். திருக்குறள் உரையாசிரியர் பலரும் திருக்குறள் திறனாய்வளர்களே. விபுலானந்தர் திருவள்ளுவரின் பல்வேறு ஆளுமைகளை எடுத்து விளக்குகிறார். மேலைநாட்டு அறிவியல் சிந்தனையாளர் அரிசுடாட்டில் தொடங்கி பதஞ்சலி யோகியின் யோக தத்துவங்கள் வரை திருக்குறளிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளதை ஆசிரியர் எடுத்துரைக்கும் நுட்பம் ஆய்வுக்குரியதாகும். பரிமேலழகர், மணக்குடவர் போன்றோர் திருவள்ளுவரின் யோகமுயற்சிசிகளை சுட்டிச் சென்றுள்ளனர். பிறகு வந்த உரையாசிரியர்கள் யாரும் யோக முயற்சி குறித்துயாதும் எழுதவில்லை.

பேராசிரியர்கள் செ.வை சண்முகம் பேராசிரியர் இரா. கோதண்டராமன் இருவரும் மொழிநூல் வித்தகர்கள்; தமிழகம் எங்கும் அவர்களுடைய மாணவர்கள் அப்பெருமக்கள் தொல்காப்பியர் விளக்கும் மொழிநூல் செய்திகளை எடுத்துரைக்க மொழியில் ஏற்பட்டுள்ள மாற்றாங்களை விளக்கும் செய்தி மாணவர்கள் சிந்திக்கத்தக்கது.

சங்கச் சான்றோர்க்குப் பெயர்சூட்டு விழா

(1) பெயர் சூட்டு விழா

- முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்**

விழா என்றால் இளையர் முதல் பெரு முதியர் வரை பெருமகிழ்ச்சி. இல்லார் இருப்பார் என்பது இல்லாமல், எல்லார்க்கும் மகிழ்ச்சி. ஏன்? விழா என்பது விழைவின் அடிப்படையில் - விருப்பத்தின் அடிப்படையில் எடுக்கப்படுவது.

ஊர்ப்பொங்கல் ஆகட்டும் தைப்பொங்கல் ஆகட்டும், மகிழ்வான நாள்களே. அதனால் பொங்கல் என்பதற்கே மகிழ்ச்சி என்னும் பொருள் உண்டாகிவிட்டது.

உழைக்கும் மக்களுக்கு ஊடே ஊடே ஓய்வும் - உவகையும் வேண்டும் அல்லவோ! அதனால் பிறந்த நாள் விழா, பெயர் சூட்டுவிழா - சோறூட்டு விழா, பூப்புவிழா, மணவிழா, மணிவிழா எனப் பலப்பல விழாக்கள் வழிவழியாக உண்டாயின.

எந்நாட்டார்க்கும் 'விழா' பொது! எல்லார்க்கும் விழா பொது! சமயங்களுக்கும் விழா உண்டு! நாட்டுக்கும் விழா உண்டு!

தம் முன்னோர் வழிபாடு போலவும், இறைவழிபாடு போலவும் பழநாள் பெயர்சூட்டு விழா நடந்தது. பெற்றோர்க்குப் பெற்றோர் ஆகிய பாட்டன் பாட்டியர் பெயரைச் சூட்டுவதால், பெயரன் பெயர்த்தி என்னும் முறைப் பெயர்கள் உண்டாயின. அப் பெயர்களைச் சொல்ல முடியாமல் வேறொரு பெயர் சூட்டி அழைத்தனர். எப்படியும் ஒருவர்க்கு ஒரு பெயரே இருப்பதில்லை; படிக்கும் இடம், பணி இடம், ஊர்மக்கள் என ஏதாவது ஒரு பெயரைத் தந்துவிடுவர்!

சங்கப் புலவர்கள் பாடிய பாடல்களை ஓர் அமைவு கொண்டு தொகை ஆக்கினர். தனித்தனிப் பாடல்களாக இருந்தால் விழுந்துபட்டும் விடுபட்டும் போகும் எனத் தொகுத்தனர். அப்படித் தொகுத்த பாடல்களுக்குப் பாடியவர் சிலர் பெயர் அகப்படவில்லை. பாட்டு சிறப்பாக உள்ளது. பாடியவர் பெயர் இல்லை. அதனை விட்டு விடலாமா? தமிழ் வளத்தை அப்படி உதறி விடக்கூடாது என்னும் நல்லுணர்வால் அப்பாடல்களைத் தொகையோடு சேர்த்தனர்.

அப்பாடல் பாடியவர் பெயர் இல்லையே! நாமும் இல்லை என விட்டுவிடக்கூடாது என்னும் பொறி தட்ட, ஓர் உத்தி கண்டனர்.

பாடியவர்கள் பெயர்கள் கிடைத்தாலும் நூலுக்குத் தனிப் பெயர் சூட்டு உண்டு அல்லவா! முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு எனப் பெயர் சூட்டப் பட்டிருக்கவில்லையா?

பதிற்றுப்பத்தைப் பாடியவர்கள் பெயர் இருந்தும் பாடலில் உள்ள தொடர் கொண்டு அப்பாடற்குப் பெயர் சூட்டவில்லையா? அதுபோல் பாடியவர் பெயர் அறியவராத பாடல்களுக்கு அப்பாடலில் அமைந்துள்ள **நயமான தொடர்கொண்டு** பெயர் சூட்டிவிடலாம் எனத் தேர்ந்தனர்.

பாடல் தொடர் மட்டும் சூட்டினால் பெயராகி விடாதே, சங்கச் சான்றோர் பெயர்களை ஒரு கண்ணோட்டம் விட்டனர். அவர்கள் பெயர்களில், ஆண்பால் புலவர் எனினும் பெண்பால் புலவர் எனினும் '**அர்**', '**ஆர்**' சேர்த்திருக்கக் கண்டனர்; தொடரோடு பொருந்தும் வகையில் **அர், ஆர்** என்பவற்றைச் சேர்த்துவிடலாம் என முடிவெடுத்தனர். அவ்வாறு முடிவெடுத்த பெயர்கள் குறுந்தொகையில் 15, புறநானூற்றில் 4. நற்றிணையில் 2. அகநானூற்றில் 1. என இருபத்திரண்டு பாடல்களுக்குத் தொடரைக் கொண்டு சான்றோர், **சான்றோர்க்குப் பெயர் சூட்டு விழா நடத்திவிட்டனர்**. அவர்களை அகர வரிசையில் பார்த்தால், முதலாவது தோன்றுபவர்,

'அணிலாடு முன்றிலார்'

என்பவர். அணிலாடு முன்றில் என்று பாடலில் வரும் தொடரொடு ஆர் சேர்த்து 'அணிலாடு முன்றிலார்' என்றனர்.

சங்க இலக்கியத் தொகுப்பில் தொடரால் பெயர் பெற்றவர் என்னும் வரிசையில் 27 பெயர்கள் இருந்தாலும்,

'இம்மென் **கீரனார்**'

என்பார் பெயரில் சான்றோர் பெயர் '**கீரனார்**' என்றுளது.

'கொட்டம் பலவனார்'

பாடலில் அத்தொடர் இல்லை. தாளம் கொட்டும் என்று தொடர் உண்டு எனினும், **அம்பலவனார்** பெயராகிறது.

'கோவேங்கைப் பெருங்கதவனார்'

என்னும் பெயரில் '**பெருங்கதவனார்**' எனப் பெயர் உள்ளது.

தும்பி சேர் கீரனார்

பெயரில் **கீரனார்** பெயர் உள்ளது. அப்பெயர் 'தும்பைச் சொகினனார்' என்று திருத்தம் கண்டாலும், 'தும்பை' என ஊர் உண்டு. சொகினம் என்பது 'சகுனம்' ஆகும். அதனால் பெயர் பெற்றவராகிறார்.

'விழிக்கட்பேதைப் பெருங்கண்ணனார்'

என்பதில் பெருங்கண்ணனார் என்னும் பெயருண்டு. இவர்கள் தொடரொடும் பெயரும் கொண்டவர்களே அல்லாமல், தொடரால் பெயர் பெற்றவர்கள் அல்லர் என விலக்க, அவ்வகையால் **22 பெயர்கள் உள.**

தொகுக்கும் காலத்துப் பெயர் இருந்து பின்னே பெயர்காணப் படாதவர்கள் பாடல்கள் உள்ள தொடர் கொண்டு உரைகண்டவர்களோ, பதிப்பித்தவர்களோ பெயர் சூட்டவில்லை. அவை பாடியவர் பெயரிலாப் பாடல்கள் எனினும் பின்னை ஆய்வர் வழியே ஏடுகளில் சில பெயர்கள் கிடைத்தாலும், சங்கப் புலவர் நிரலடைவில் இல்லாமையால் இவ்வாய்வில் அப்பெயர்கள் எடுத்தாளப்படவில்லை.

மேலே, அகர நிரலில் பெயர் சூட்டுவிழாப் பெயர்களைக் காண்போம்.

1. அணில் ஆடு முன்றிலார்

'அணில்' அழகான உயிரி! அதனைத் தொல்காப்பியர் '**மூவரி**' அணில் என்றார். நாம் இன்றும் அப்படித்தானே அதனைக் காண்கிறோம். அணில் வரிபோல் அமைந்து நாம் பச்சையாகத் தின்னும் காய் ஒன்று உண்டு. அது **வெள்வரிக்காய்** (வெள்ளரிக்காய்) வால் - என்பது வெண்மை, தூய்மை. அதனால் '**வால் வரிக்காய்**' என்பதும் அதன் பெயர்; அரியும் வரியும் ஒரே பொருளனவே.

இளங்கோவடிகள் அக் காய் வரியை, அணில் வரியோடு ஒப்பிட்டுப் பார்த்தார். உவகை உற்றார். அதனால் '**அணில்வரிக்காய்**' என்றார்.

வரிகள் எத்தனை என எண்ணினார். வரிகள் மூன்று. ஆதலால், ஒருபொருள் மேல் மூன்று பாடுதலை '**வரிப்பாடல்**' என்றார். அவ்வகையால், வாழ்த்துவரி, ஊசல்வரி, அம்மானைவரி, கந்துக வரி, முரிவரி எனப் பல வரிகளைப் பாடினார்.

அணில்வரி, 'அணிவகுப்பு' என்னும் படைச் செலவுக்கு ஆயது. படை ஆணையிட்டதும் நடக்க, ஓட, தாக்க வேண்டும் நிலையில் (தயார் நிலையில்) இருத்தல் வேண்டும். ஆதலால் **பாவாணர்** தயார் நிலையை '**அணியம்**' எனக் கலைச்சொல் ஆக்கினார்.

அணில் ஆடுகிறது; ஓடுகிறது; துள்ளுகிறது; தாவுகிறது. வீழ்கிறது. இரண்டு மூன்று சேர்ந்துவிட்டால் காணக் காண இன்பமாகிறது. குட்டிகளை அணில் தூக்கிச் செல்லும் பரிவும் பற்றும் பாசப்பெருக்கு! ஆண் அணில், பெண் அணில் இரண்டும் குட்டியைத் தூக்கப் போட்டி போடும்!

ஒரு வீடு; வீட்டின் முற்றம்; இல் முன் என்பது 'முன்றில்' முற்றம் ஆயது. மகளிர் எழுந்து முகம் கழுவியதும் முற்றத்தைப் பொலிவாக்குதல் தானே வீடுதோறும் நாம் இன்றும் காணும் காட்சி! முற்றப் பொலிவே முகப்பொலிவு ஆக்கிவிடுகின்றது அல்லவா!

ஓர் ஊர்; திருவிழா! அவ்வூர்க் கூட்டம் மட்டுமா? உற்றார் உறவு; வேற்றார் விருந்து; விழா வேடிக்கை; ஆட்டம் பாட்டம்; தேர் திருச்சுற்று என எத்தகு கூட்டம்!

ஆனால், ஊரையே வளைத்துப் பகைவர் வெறித்தனமாகத் தாக்கினால் - ஊரே ஓட்டமெடுக்கும்; பதுங்கும்! ஒருவரும் தலை காட்டமாட்டார்!

ஊரெல்லாம் ஓடிப்போன வீடுகளில் முற்றத்தே அச்சம் இல்லாமல் ஆட்டம் போடுகிறது அணில்.

"என் தலைவனோடு நான் இருந்தால் விழாக் கொண்ட ஊர்போல் மகிழ்ச்சியடைவேன். ஆனால், என்னைவிட்டுப் பிரிந்து சென்றுவிட்டால், காட்டிலே உள்ள சிற்றூர் மக்கள் எல்லாம் அச்சத்தால் ஓடிப்போக அணில் விளையாடித் திரியும் நிலைபோல என் அவல நிலை ஆகிவிடும்!" என்று தலைவி தன் தோழிக்குச் சொல்வதாக அமைந்தது அப்பாட்டு.

தலைவன் பிரிவு உண்டாகியபோது வேறுபாடு அடைந்த தலைவியைக் கண்டு கவலைப்பட்ட தோழியை நோக்கித் தலைவி சொல்லியதாக அமைந்தது **இக்குறுந்தொகைப்** பாட்டு (41)

"காதலர் உழைய ராகப் பெரிதுவந்து
சாறுகொள் ஊரில் புகல்வேன் மன்ற;
அத்தம் நண்ணிய அம்குடிச் சீறூர்
மக்கள் போகிய **அணிலாடு முன்றில்**
புலப்பில் போலப் புல்லென்று
அலப்பென் தோழிஅவர் அகன்ற ஞான்றே"

- பிரிவிடை வேறுபாடு கண்டு கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

அரும்பொருள்: உழையர்ஆக - பக்கத்தில் இருப்பவர் ஆக; சாறு - விழா; புகல்வேன் - மகிழ்ந்து உரையாடுவேன்; மன்ற - உறுதியாக; அத்தம் - காடு; சீறூர் - சிற்றூர்; புலப்பில் போல - வெறுக்கத்தக்க வீடுபோல; புல்லென்று அலப்பென் - பொலிவில்லாமல் வருந்துவேன்; அவர் அகன்ற ஞான்று - கணவர் பிரிந்து போன பொழுது.

விபுலானந்தர் நோக்கில் திருக்குறள்

பேராசிரியர் **ப.மருதநாயகம்**
ஆய்வறிஞர்,
நடுவண் அரசு செவ்வியல்
தமிழ் நிறுவனம்,
தரமணி, சென்னை 600113.
கைபேசி : 9442787727

விபுலானந்த அடிகளார் "தமிழ் நிலத்து நூல்களிலெல்லாம் தலைசிறந்த நூல்" (The Book of Books of Tamil Land) என்னும் பெயர்கொண்ட ஆங்கிலக் கட்டுரையில் திருக்குறளின் நிறைகளையெல்லாம் ஈடிணையற்றமுறையில் எடுத்துக்கூறுவார். திருக்குறளின் காலம் பற்றியும், அதன் வடிவ, பொருட்சிறப்புப்பற்றியும், அதன் தனித்தன்மை பற்றியும் பல்வேறு கருத்துகள் நிலவிவந்த காலத்தில் தன் முடிவுகளைத் தக்க சான்றுகளோடு அவர் விளக்குவதைக் காணலாம்.

திருக்குறள் கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலோ அல்லது அதற்குப்பிறகோ எழுதப்பட்டிருக்க வேண்டும் என்ற எண்ணத்தை மறைமுகமாக மறுத்து, அதன்காலம் இன்னும் முன்னுக்குக்கொண்டு செல்லப்படவேண்டியது என்பதை அடிகளார் வலியுறுத்துவார். ரோமானிய மன்னரும் தத்துவ விற்பன்னருமான மார்க்கஸ் அவுரேலியஸ் (Marcus Aurelius) வாழ்ந்த காலத்திலிருந்த தமிழகத்து அறிஞர்கள் திருக்குறளிலிருந்து மேற்கோள்கள் தந்திருப்பதால் அந்நூல் அவர்களுக்குப் பல நூற்றாண்டுகள் முன்னரே தோன்றியிருக்க வேண்டும் என்பது அவர் கருத்து. காலத்திரையை நீக்கிப் பார்த்தோமானால் அதன் காலம் மேலும்மேலும் பழமையானதென்றே நம் ஆய்வு முடிவுகள் வெளிப்படுத்தும்.

> The more one attempts lift the veil of time and investigate into the past, the further the date of this book recedes. It is definite that it was written before the close of the first century of the Christian era. Further investigation may fix the date of composition earlier but not later.

வள்ளுவர் கி.மு.நான்காம் நூற்றாண்டில் கிரேக்கப் பேரறிஞரான அரிஸ்டாட்டில் காலத்தவராக இருக்கலாமென்றும் அன்னாரைப் போன்றே அவரும் அறம், அரசியல், சொல்லாட்சி பற்றியெல்லாம்

எழுதியிருக்கிறாரென்றும் குறிப்பிடும் அடிகள் அர்த்தசாஸ்திரம் எழுதிய கௌடில்யர் காலத்தில் வள்ளுவர் வாழ்ந்திருக்கலாமென்றும் அவரைப் போன்றே அரசருக்கான சட்டதிட்டங்களை வகுத்துள்ளாரென்றும் கூறுவார். அவ்விரண்டு அறிஞர்களின் நூல்களில் கூறப்பட்டுள்ள கருத்துகளுக்கும் வள்ளுவர் கருத்துகளுக்கும் பல ஒற்றுமைகள் இருப்பினும் வள்ளுவர் அவர்களுக்கு எவ்விதத்திலும் கடன்பட்டவர் அல்லர் என்றும் தொல்காப்பியர் புலப்படுத்தியுள்ள தமிழ்மரபே வள்ளுவருக்கு மூலமென்றும் அடிகளார் தெளிவுபடுத்துவார்.

> But the structure of his great work is based on the literary canons formulated by the ancient Tamil rhetorician Tolkappiyanar. (p.164)

வள்ளுவர் ஒரு யோகியென்றும், முனிவரென்றும், கைதேர்ந்த அரசியல் வல்லுநரென்றும் காதல்பற்றியும் துறவு வாழ்க்கை, சிந்தனைவாழ்க்கை, செயல்வாழ்க்கை பற்றியும் முற்றுமறிந்த மேதையென்றும் எச்சமயச்சார்பும் அற்றவரென்றும் நேர்மையுணர்வோடு அடிகள் மதிப்பிடுவார்.

> The author is a yogi, a mystic and at the same time a practical statesman. He discourses on love with soft tenderness and with even greater fervour speaks of renunciation and the life of contemplation. He exhibits no partiality for sects, but from the time he lived many sects endeavour to claim him as their own. (p.164)

திருக்குறளின் பெருமையைப் புலப்படுத்த அடிகளார் திருவள்ளுவமாலையிலிருந்து கீழ்க்கண்ட பாடல்களை நல்ல ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத்தருவார்.

> நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோன்
> தான் மறைத்து வள்ளுவனாய்த் தந்துரைத்த - நான்முறையை
> வந்திக்க சென்னிவாய் வாழ்த்துக நன்னெஞ்சம்
> சிந்திக்க கேட்க செவி. (உக்கிரப்பெருவழுதியார்)

> மாலும் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியான்
> ஞாலம் முழுதும் நயந்தளந்தான் - வாலறிவின்
> வள்ளுவரும் தம்குறள் வெண்பா அடியால் வையத்தார்
> உள்ளுவவெல்லாம் அளந்தார் ஓர்ந்து. (பரணர்)

அறம்பொருள் இன்பம் வீடென்னும் அந்நான்கின்
திறம் தெரிந்து செப்பியதேவை - மறந்தேயும்
வள்ளுவன் என்பான் ஓர்பேதை அவன்வாய்ச்சொல்
கொள்ளார் அறிவுடை யார். (மாமூலனார்)

சாற்றிய பல்கலையும் தப்பா அருமறையும்
போற்றி உரைத்த பொருளெல்லாம் - தோற்றவே
முப்பால் மொழிந்த முதற்பாவல ரொப்பார்
எப்பா வலரினும் இல். (நல்லந்துவனார்)

செய்யா மொழிக்கும் திருவள்ளுவர் மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருள்ஒன்றே - செய்யா
அதற்குரியர் அந்தணரே ஆராயின் ஏனை
இதற்குரியர் அல்லாதார் இல். (வெள்ளி வீதியார்)

ஓதற் கெளிதாய் உணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கித் - தீதற்றோர்
உள்ளுதொறும் உள்ளுதொறும் உள்ளம் உருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு. (மாங்குடி மருதனார்)

எப்பொருளும் யாரும் இயல்பின் அறிவுறச்
செப்பிய வள்ளுவர் தாம்செப்பவரும் - முப்பாற்குப்
பாரதம் சீராமகதை மனுப் பண்டைமறை
நேர்வன மற்றில்லை நிகர். (பாரதம் பாடிய பெருந்தேவனார்)

இவ்வேழு பாடல்களையும் மேற்கோள்களாகக் காட்டும் அடிகளார் இவை மரபுக் கல்வியில் ஊறித்திளைத்த பண்டிதர்களின் மதிப்பீட்டைத் தொகுத்துச் சொல்பவையென்பார்.

திருக்குறளுக்கு இன்னொரு பெருமையையும் சுட்டிச் சான்றுகளோடு அடிகளார் நிறுவுவது குறிப்பிடற்குரியது. மாந்த இயல்பு பற்றியோ, அவர் நடத்தை பற்றியோ யாவர்க்கும் பொருந்தும் உயர்ந்த கருத்தினை உலகின் எந்நாட்டையோ, எக்காலத்தையோ சேர்ந்த

யாரேனும் ஓர் அறிஞர் கூறியிருப்பதைக் கண்டு வியப்புறுவார் அதனைத் திருக்குறளில் எளிதாகக் காணல் இயலும் என்பது அடிகளாரின் அறைகூவல். அதற்கு அடிகளார் தரும் மேற்கோள்கள்:

நாவை அடக்குதலே முதல் நற்பண்பேன் நான்.
தான் எண்ணுவது சரியென்று உணர்ந்தபோதும்
மௌனமாக இருக்கக் கற்றவனே தெய்வங்களுக்கு
இணையானவன். (கேட்டோ)

அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும். (121)

ஒன்றை ஏற்றுக்கொள்வதா, புறக்கணிப்பதா என்பதை முடிவுசெய்வதற்கு ஏற்ற உண்மையான மதிப்பீடு, அதனால் தீமை அதிகமா, நன்மை அதிகமா என்று கண்டறிவதே. முற்றும் நன்மையானதென்றோ, முற்றும் தீமையானதென்றோ சொல்லக்கூடியது ஏதும் இல்லை. எல்லாமே இரண்டும் கலந்தவை யென்பதால் நன்மை அதிகமா, தீமை அதிகமா என்று நாம் கண்டறிய வேண்டியது எப்போதும் இன்றியமையாததாகிறது. (ஆபிரகாம் லிங்கன்)

குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல். (504)

ஒரு மனிதனது பண்பை எடையிட விரும்பினாயானால் அவனுடைய அரிய செயல்களை அடிப்படையாகக் கொள்ளாதே. ஒவ்வொரு மூடனும் ஏதோவொரு சமயத்தில் அருஞ்செயல் புரியலாம். எனவே ஒருவனது பொதுவான அன்றாடச் செயல்களையெல்லாம் கணக்கிலெடுத்துக்கொண்டு அவனைப்பற்றி முடிவுசெய். அவையே அவனது உண்மையான தன்மையை வெளிப்படுத்தும். (விவேகானந்தர்)

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல். (505)

மற்றொரு அரிய ஆய்வு மூலமாகவும் அடிகளார் திருக்குறளின் உயர்வை நமக்கு எடுத்துச்சொல்வார். இது அவர்போன்ற

பெருங்கல்வியாளராலும் பன்மொழி விற்பன்னராலும் மட்டுமே செய்யமுடிந்த ஆய்வாகும்.

பதஞ்சலியின் யோகசூத்திரங்களில் யோகத்தின் ஒழுங்கையும் பயிற்சியையும் பற்றிப் பேசும் இரண்டாவது அத்தியாயமே மிக இன்றியமையாச் சிறப்புடையதாகும். இந்த அதிகாரத்தில் காணப்படும் தலைப்புகள் இன்னும் விரிவாகத் திருக்குறளின் கீழ்க்கண்ட அதிகாரங்களில் விளக்கப்படுகின்றன:

1) கடவுள் வாழ்த்து 8) அன்புடைமை 10) இனியவை கூறல் 12) நடுவுநிலைமை 13) அடக்கமுடைமை 14) ஒழுக்கமுடைமை. 15) பிறனில் விழையாமை 16) பொறையுடைமை 17) அழுக்காறாமை 18) வெஃகாமை 19) புறங்கூறாமை 20) பயனில சொல்லாமை 21) தீவினையச்சம் 23) ஈகை 25) அருளுடைமை 26) புலால் மறுத்தல் 27) தவம் 28) கூடாவொழுக்கம் 29) கள்ளாமை 30) வாய்மை 31) வெகுளாமை 32) இன்னா செய்யாமை 33) கொல்லாமை 35) துறவு 36) மெய்யுணர்தல் 37) அவா வறுத்தல் 40) கல்வி 42) கேள்வி 43) அறிவுடைமை 44) குற்றங்கடிதல் 45) பெரியாரைத் துணைக்கோடல் 46) சிற்றினம்சேராமை. 58) கண்ணோட்டம் 61) மடியின்மை 66) வினைத்தூய்மை 67) வினைத்திட்பம் 79) நட்பு 84) பேதைமை 85) புல்லறிவான்மை 90) பெரியாரைப் பிழையாமை 97) மானம் 98) பெருமை 99) சான்றாண்மை 100) பண்புடைமை 101) நன்றியில் செல்வம் 107) இரவச்சம்.

இவ்வாறு, திருக்குறளில் மூன்றிலொரு பங்கு யோக சாத்திரமாய் அமைந்துள்ளதை அடிகளார் அடிக்கோடிட்டுக் காட்டுவார். இதுமட்டுமல்லாமல் திருக்குறளின் முப்பத்தாறாம் அதிகாரமாகிய "மெய்யுணர்தலில்" பதஞ்சலி நூலின் ஏனைய தலைப்புகள் தரும் செய்திகள் அடங்கியிருக்கக் காணலாம். ஐந்து முதல் இருபத்து நான்கு வரையிலான 20 அதிகாரங்கள் கொண்ட இல்லற இயலும் இருபத்தைந்து முதல் முப்பத்தெட்டு வரையிலான 14 அதிகாரங்கள் கொண்ட துறவற இயலும் ஒரு தருமசாத்திரமாகக் கருதத்தக்கவை. முப்பத்தொன்பது முதல் நூற்றியெட்டு வரையிலான 70 அதிகாரங்கள் கருத்தளவிலும் செயல்முறை அளவிலும் ஓர் அர்த்தசாத்திரமாகும். களவு பற்றிப் பேசும் 109 முதல் 115 வரையிலான 7 அதிகாரங்களும் கற்புப் பற்றிப் பேசும். 116 முதல் 133 வரையிலான 18 அதிகாரங்களும் முருகியலின்பம் தரும் கவிதைகள் என்று குறிப்பிடும் அடிகளார் திருக்குறளின் காமத்துப்பால் வடமொழியிலுள்ள காமசாத்திரங்களிலிருந்து வேறுபடுவதைத் தெளிவுபடுத்துவார்.

They vastly differ from the writings of Vatsyayana and such other authors; for, the love treated here is the pure love between husband and wife, the tender affection on which the whole fabric of social life is based (p.168)

வாத்சியாயனரின் காமசூத்திரமும் பிறவடமொழி நூல்களும் காமத்தை வெறும் ஆண்-பெண் உடலுறவு நிலையாகக் காட்சிப்படுத்தும். திருக்குறளின் காமத்துப்பால் சமுதாய வாழ்விற்கு அடித்தளமாகிய கணவன் - மனைவி ஒருவர்பால் ஒருவர் கொண்டுள்ள தூய அன்பின் நுட்பத்தை வெளிப்படுத்தும். காமத்துப்பால் அதிகாரங்களோடு ஒப்பிடத்தக்கவை மாணிக்கவாசகரின் திருக்கோவையாரும் விவிலியத்தின் பழைய ஏற்பாட்டிலுள்ள மன்னன் சாலமன் எழுதியதாகக் கருதப்பெறும் Song of Songs என்னும் பாடலுமேயாகும். இவை மூன்றும் ஆண் - பெண் காதலை இறைவனுக்கும் மனித ஆன்மாவுக்குமுள்ள உறவுநிலைக்கு உயர்த்துகின்றன என்று அடிகளார் விதந்து கூறுவார்.

அரிஸ்டாட்டில், பேச்சுக்கலை rhetoric பற்றிக் கூறுவதன் சாரத்தைத் திருக்குறளின் அமைச்சு (64), சொல்வன்மை (65), வினைத்தூய்மை (66), வினைத்திட்பம் (67), வினைசெயல்வகை (68), தூது (69), மன்னரைச் சேர்ந்தொழுகல் (70), குறிப்பறிதல் (71), அவையறிதல் (72), அவையஞ்சாமை (73) ஆகிய பத்து அதிகாரங்களில் காணலாம் என்பதும் இன்னொரு கிரேக்க நூலான **The Golden Verses of the Pythagoreans** திருக்குறளைப் பெரும்பாலும் ஒத்து அமைந்திருக்கிறது என்பதும் அடிகளாரின் ஆய்வு முடிவுகள். **பித்தகோரியர்களின் தங்கப்பாடல்கள்** நாள்தோறும் செய்யவேண்டிய தியானப்பாடல்களைக் கொண்டதென்றும், 'ஆன்மாக்களின் பயிற்சியாளர்' என்று போற்றப்பட்ட பித்தகோரஸ் என்னும் தத்துவமேதையால் எழுதப்பட்டதென்றும் உடல், உள்ளம், அறிவு ஆகியவற்றை வழிப்படுத்தி இறைவன்பால் அன்புகொண்டு வாழும் வாழ்க்கைமுறைப்பற்றிப் பேசுவதென்றும் கூறுவர். மிகவும் சுருக்கமாகக் கருத்துக்களைச் சொல்லும் அந்நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பு 82 அடிகளால் ஆனது. சொல்லிலும் பொருளிலும் அந்நூலிலுள்ள சில கவிதைகள் குறட்பாக்களை மிகவும் ஒத்துள்ளன.

"செல்வம் வரும் போகும்"

"அதிட்டதேவதை மனிதனுக்குப் பல தீமைகளைச் செய்வாள். உனக்கு ஏற்படும் துன்பங்களைப் பணிவோடு ஏற்றுக்கொள். அது பற்றி வருந்தாதே, நொந்து கொள்ளாதே. உன்னால் அவள் தரும் நோயைக் குணப்படுத்திக் கொள்ள இயலும்."

"இதை நன்றாக நினைவில் கொள்: நல்லவர்களுக்கு விதியானது மிகக்குறைந்த அளவு தீங்கையே விளைக்கும்."

"நல்லது கெட்டதுமான பல கருத்துக்கள் மனிதர்களின் காதுகளில் விழலாம். அவற்றையெல்லாம் பாராட்டியேற்றுக் கொள்ளாதே; முற்றுமாக அவற்றைப் புறக்கணித்தும் விடாதே"

(பித்த கோரியத் தங்கப்பாடல்கள்)

இவற்றை ஒத்த குறள்கள் என்று அடிகள் காட்டுபவை:

கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று. (332)

உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு (339)

நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
அல்லற் படுவ தெவன். (379)

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. (423)

ஒருவன் உண்மையல்லாததைப் பேசுவானாயின் அதனைப் பொறுத்துக்கொண்டு அமைதியாயிரு. நான் இப்பொழுது சொல்வதை எப்பொழுதும் செயலில் காட்டு. யார் பேசுவதும் செய்வதும் உனக்கு நன்மை பயக்காததாயின் அதனால் ஏமாந்து ஏதும் பேசவோ செய்யவோ முனையாதே. முதலில் நன்றாகச் சிந்தித்துப் பின்னர் செயல்படு. அப்பொழுதுதான் உனது செயல் முட்டாள்தனமானதாகாது.

சிந்திக்காமல் பேசுபவனும் செயலில் இறங்குபவனும்
பின்னால் வருந்த நேரிடும். (பித்தகோரியத் தங்கப்பாடல்கள்)

துறந்தாரின் தூய்மை உடையர் இறந்தார்வாய்
இன்னாச்சொல் நோற்கிற் பவர். (159)

திறனில்ல தற்பிறர் செய்யினும் நோநொந்
தறனல்ல செய்யாமை நன்று. (157)

எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு. (467)

இவ்வெடுத்துக் காட்டுகளைத் தரும் அடிகளார், பித்தகோரியத் தங்கப் பாடல்கள் யாவும் நாற்பத்து நான்கு குறட்பாக்களில் அடங்கக் காணலாம் என்பார்.

திருக்குறள் தமிழ் அறஇலக்கியமரபின் நடுநாயகமாகத் திகழ்வதைப் புலப்படுத்தும் அடிகளார் தமிழ்க்காப்பியங்கள் எவ்வாறு திருக்குறளுக்குக் கடன்பட்டிருக்கின்றன என்பதை நிறுவுதற்குத் தரும் சான்றுகள் ஏராளம்.

சிலப்பதிகாரம் மூன்று அறவுண்மைகளை வலியுறுத்துவது:

1) அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்.

2) கற்புடைப் பெண்டிரை உயர்ந்தோர் ஏத்துவர்

3) ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும்.

இம்மூன்று உண்மைகளையும் கீழ்க்கண்ட குறள்கள் கூறும்:

அறத்தின்ஊஉங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு. (32)

பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மைஉண் டாகப் பெறின். (54)

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும். (380)

சீவகசிந்தாமணியில் திருக்குறளின் செல்வாக்கிற்கும் பல எடுத்துக்காட்டுகள் உண்டு.

இடுக்கண் வந்துற்ற காலை எரிகின்ற விளக்குப்போல
நடுக்க மொன்றானுமின்றி நகுக. (509)

இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வது அஃதொப்ப தில் (621)

ஆர்வவேரரிந்து அச்சணந்திபோய்
வீரன் தாள்நிழல் விளங்கநோற்றபின்
மாரிமொக்குளின் மாய்ந்து விண்தொழச்

சோர்வில் கொள்கையான் தோற்றம் நீங்கினான். (409)

அவாவென்ப எல்லா உயிர்க்கும்எஞ் ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து. (361)

பஞ்சியடரனிச்ச நெருஞ்சியீன்ற பழமாலென்று
அஞ்சி மலரடிகளரங்கண்டன்ன வருங் காட்டுள்
குஞ்சித்தசைந்தசைந்து குருதி கான்று வெய்துயிரா
வஞ்சியிடை நுடங்க மயில்கை வீசி நடந்ததே. (341)

அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம். (1120)

கம்பனும் இராமாயணத்தில் பல குறள்களை எடுத்தாண்டுள்ளான்.

சில தமிழ்க் கவிஞர்கள் குறட்பாக்களை உள்ளவாறே தம் படைப்புகளில் மேற்கோள்களாகத் தருவதும் திருக்குறள் அக்காலத்திலேயே பெற்றிருந்த புகழை வெளிப்படுத்தும்.

சாத்தனார் **மணிமேகலையில்** 55ஆம் குறளைத் தம் கவிதையில் இணைத்து ஆசிரியனைப் பொய்யில் புலவன் என்று பாராட்டுவார்.

தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப்
பொய்யில் புலவன் பொருளுரை தேறாய். (XXII 5961)

உமாபதி சிவாசாரியார் தமது நெஞ்சுவிடுதூதில் 348ஆம் குறளைக் கையாண்டு ஆசிரியனைத் தெய்வப் புலவன் என்று அழைப்பார்.

தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றையாரென்று - நிலைத்தமிழில்
தெய்வப் புலமைத் திருவள்ளுவர் உரைத்த...

உய்யவந்த தேவர் தமது **திருக்களிற்றுப்படியாரில்** 359, 362 ஆகிய இரண்டு குறள்களை எடுத்தாள்வார்.

சார்புணர்ந்து சார்பு கெட வொழுகின் என்றமையால்
சார்புணர்வு தானே தியானமு மாஞ்சார்பு

கெட வொழுகின் நல்ல சமாதியுமாங் கேதப்
படவருவ தில்லை வினைப்பற்று.

“வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை என்றமையான்”

சேரமான் பெருமாள் தமது திருக்கைலாய ஞான உலாவில் 752, 1101 ஆகிய இரண்டு குறள்களையும் பயன்படுத்திக் கொள்வார்.

இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு. *(752)*

கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள. ***(1101)***

திருக்குறளுக்கு மூலமாய் அமைந்த நூல்கள் யாவையென்ற ஆய்வையும் அடிகளார் மேற்கொள்கிறார். ஒப்புமைப்பகுதிகளின் பட்டியலிலிருந்து கிரேக்க, ரோமானிய நூல்களோ, வடமொழி நூல்களோ மூலங்களென்ற தவறான முடிவிற்கு யாரும் வந்துவிடக் கூடாதென்பதற்காக இந்த ஆய்வைச் செய்யும் அடிகளார் திருக்குறளுக்கு முன்னிருந்த தொல்காப்பியம், சங்க இலக்கியங்களிலிருந்தே தம் கருத்துக்களை வள்ளுவர் பெற்றிருக்க வேண்டுமென்றும் ஆனால் அவற்றைச் சீர்தூக்கிப் பார்த்துத் தமது முடிவுகளைத் தம் முத்திரை பதித்து வெளியிட்டிருக்க வேண்டுமென்றும் தெளிவுபடுத்துவார். அடிகளார் முடிவு நூற்றுக்கு நூறு சரியானதென்பதைச் சொல்லத் தேவையில்லை.

> A new formulation was needed and this was supplied by the profound thinker whose work carries the seal of authority from the time in which it originated up to the present day. A careful perusal of the Kural would show that Thiruvalluvar has gathered his ideas and expressions from the older Tamil poets and has marked on them the stamp of his own personality. (p.174)

மாந்தனின் தனி வாழ்க்கை, சமுதாய வாழ்க்கை ஆகியவற்றின் எல்லாக் கூறுகளையும் நுட்பமாக ஆராய்ந்து தெளிவாக அறிவுரை கூறுதலால் திருவள்ளுவர் என்னும் முனிபுங்கவரின் அழியாப் பெருநூல் அவரது மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட ஆண்களுக்கும் பெண்களுக்கும் மட்டுமின்றி, தமிழகம் கடந்த பலநாட்டார்க்கும் பலநூற்றாண்டுகளாக வழிகாட்டியாகச் செயல்பட்டுவருகிற தென்பது அடிகளார் அதற்கு மனமுவந்து அளிக்கும் பாராட்டு.

விபுலானந்தர் தமது “திருக்குறள் முதலதிகாரமும் திருச்சிவபுரத்துத் திருப்பதிகமும்” என்னும் கட்டுரையில் திருக்குறளின்

கடவுள் வாழ்த்தும் சம்பந்தரின் "திருச்சிவபுரத்துத் திருப்பதிகமும்" சில ஒப்புமைப் பகுதிகளோடு திகழ்வதைத் தெளிந்த ஆய்வுக் கண்ணோட்டத்தோடு எடுத்துரைப்பார்.

கடவுள் வாழ்த்தின் ஒன்பதாம் குறளில் இறைவன் "எண்குணத்தான்" என்று அழைக்கப்படுகின்றான். இவ்வெட்டுக் குணங்களைக் கொண்டுள்ள இறைவனையே முதல் எட்டுக்குறள்கள் (1) ஆதிபகவன் (2) வாலறிவன் (3) மலர்மிசை ஏகினான் (4) வேண்டுதல் வேண்டாமை இலான் (5) இறைவன் (6) பொறிவாயில் ஐந்தவித்தான் (7) தனக்குவமை இல்லாதான் (8) அறவாழியந்தணன் என்று சுட்டுகின்றன. பிங்கலந்தை இவ்வெட்டுக் குணங்களைப் பவமின்மை, இறவின்மை, பற்றின்மை, பெயரின்மை, உவமையின்மை, ஒரு வினையின்மை, குறைவில் அறிவுடைமை, கோத்திரமின்மை என்று பட்டியலிடும். சைவ ஆகமங்கள் பேசும் எண்குணங்கள்: தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கை யுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருள் உடைமை, முடிவில் ஆற்றல் உடைமை, வரம்பில் இன்பம் உடைமை.

இரண்டாம் குறள் முதல் எட்டாம் குறள் வரையுமுள்ள ஏழு குறள்களும் இறைவனை வழிபடுவார் அடையும் பயன்கள் இவையென வகுத்துக் கூறும்.

1) வாலறிவனது தாளைத் தொழுவார் கற்றதனாலாய பயனை எய்துவர்.

2) மலர்மிசை ஏகியவனது அடி சேர்ந்தார் நிலமிசை நீடு வாழ்வார்.

3) வேண்டுதல் வேண்டாமையிலானது அடி சேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பை இல.

4) இறைவன் பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு இருள்சேர் இருவினையும் சேரா.

5) பொறிவாயில் ஐந்தவித்தானது பொய்தீர் ஒழுக்கநெறி நின்றார் நீடு வாழ்வார்.

6) தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு மனக்கவலை மாற்றல் அரிதன்று.

7) அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க்குப் பிற ஆழி நீந்தல் எளிது.

சம்பந்தரது பதிகத்தில் கூறப்படும் பத்துப் பேறுகளைக் கீழ்க்கண்டவாறு அடிகளார் அடையாளம் காட்டுவார்:

1) பதும நன் மலரது மருவிய சிவனது சிவபுரம் நினைபவர் செழுநிலனில் நிலை பெறுவர்.

2) அரியுருவியல் பரனுறைபதி சிலைமலி மதிள்சிவபுர நினைபவர் திரு மகளொடு திகழ்வர்.

3) முழுவதும் அழிவகை நினைவொடு முதலுரு வியல்பரன் உறைபதி செழுமணி அணிசிவ புரநகர் தொழுமவர் புகழ் மிகும் உலகிலே.

4) நியதமும் வழிபடும் அடியவர் குறைவில பதம் அணைதர அருள் குணமுடை இறையுறை வன்பதி சிறைபுனல் அமர் சிவபுரமது நினைபவர் செயமகள் தலைவரே.

5) நியதமும் உணர்பவர் தனதெழில் உருவது கொடு அடை தகுபரன் உறைவது நகர் மதிள் கன மருவிய சிவபுரம் நினைபவர் கலைமகள் தர நிகழ்வர்.

6) அருதவம் முயல்பவர் தனதடி அடைவகை நினையரன் உறைபதி திருவளர் சிவபுரம் நினைபவர் திகழ்குலன் நிலனிடை நிகழும்.

7) எயிறதன் நுதிமிசை இதமமர் புவியது நிறுவிய எழிலரி வழிபட அருள்செய்த பதமுடை அவனமர் சிவபுரம் நினைபவர் நிலவுவர் படியிலே.

8) நிசிசரன் முடியுடை தரவொரு விரல்பணி கொளும் அவன் உறைபதி திசைமலி சிவபுரம் நினைபவர் செழு நிலனினில் நிகழ்வுடையார்.

9) அரி அயனொடும் அறிவரி யதோரழல்... வெளியிடுமவ னகர் திடமலி பொழிலெழில் சிவபுரம் நினைபவர் வழி புவி திகழும்.

10) தமதுகை உணலுடை யவருணர் வருபரனுறைதரு பதியுலகினில் நலகண மருவிய சிவபுரம் நினைபவர் எழிலுருவுடையர். (ப.125)

இப்பத்துப் பேறுகளும் பதினோராம் பாடலில் தொகுத்து உரைக்கப்படும்: “ஒரு பதும் நவில்பவர் நிகழ்குலம், நிலம், நிறை, திரு, உரு, நிகரில கொடை, மிகுசய மகள், புகழ், புவிவளர் வழி, அடிமையின் மிகை, புணர்தர நலம்மிகுவர்.”

இரண்டாம் குறள் ஐந்தாம் தேவாரப் பாடலோடும், மூன்றாம் குறள் ஒன்றாம் பாடலோடும், நான்காம் குறள் இரண்டாம் பாடலோடும், ஐந்தாம் குறள் மூன்றாம் பாடலோடும், ஆறாம் குறள் ஆறாம் பாடலோடும், ஏழாம் குறள் எட்டாம் பாடலோடும் ஒரு புடை ஒப்புமை உடையன என்பதை

அடிகளார் எடுத்துக்காட்டுவார். இவற்றுக்குள்ள ஒற்றுமையை அடிகளார் வலிந்து புகுத்துவதாக நினைத்தல் இயலாது. 'வாலறிவன்' யோகிகள் உள்ளத்திலே தோன்றும் இறைவனையும், 'மலர்மிசையேகினான்' 'பதுமநன் மலரது மருவிய சிவனையும்', 'வேண்டுதல் வேண்டாமையிலான்' இடும்மை தீர்க்கும் காவற் கடவுளாதலின் 'அறிதுயில் அமர் அரிவுருவியல் பரனை'யும் 'இறைவன்' முழுவதும் அழிவகை நினைவொடு 'முதலுருவியல் பரனை'யும் 'பொறிவாயில் ஐந்தவித்தான்' பொறியொழி அருதவம் முயல்பவர் தனது அடி அடைவகை நினையரனை'யும், 'தனக்குவமையில்லாதான்' 'அரியும் அயனும் அறிவரிய முதல்வனையும் குறித்து நின்றனவாமோ' என எண்ண இடமுண்டு. மேலும் 'ஆதி பகவன் முதற்றேயுலகு' என்றாராதலின் 'எயிற்றினாலே உலகினை எடுத்து நிறுவிய ஆதிவராகம் வழிபட்ட தலைவனே 'ஆதி பகவன்' என்பதும் பொருள் இன்பம் என்னும் இரு பெருங்கடலிடைப் படிந்து நின்ற இலங்கையர் கோனை உய்யக் கொண்ட அறக் கடலாகிய பேரருளாளன் 'அறவாழி அந்தணன்' என்பதும் ஒரு வகையாக அறியக் கிடைக்கின்றன. (ப.127)

திருக்குறளையும் பரிமேலழகர் உரையையும் பழுதறக் கற்ற அடிகளார் பரிமேலழகர் செய்துள்ள தவற்றினையும் சுட்டிக்காட்டத் தயங்குவதில்லை.

கடவுள் வாழ்த்தின் மூன்றாம் குறளுக்குப் பரிமேல்ழகர் கீழ்க்கண்டவாறு பொருள் கூறுவார்:

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார். *(3)*

மலரின் கண்ணே சென்றவனது மாட்சிமைப்பட்ட அடிகளைச் சேர்ந்தார் எல்லா உலகிற்கும் மேலாய வீட்டு உலகின்கண் அழிவின்றி வாழ்வார். அன்பால் நினைவாரது உள்ளக் கமலத்தின்கண் அவர் நினைந்த வடிவோடு விரைந்து சேரலின். 'ஏகினான்' என இறந்த காலத்தால் கூறினார். என்னை? "வாராக் காலத்தும் நிகழும் காலத்தும் ஓராங்கு வரூஉம் வினைச் சொற் கிளவி, இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல் விரைந்த பொருள என்மனார் புலவர்" (தொல்.சொல்.வினை.44) என்பது ஓத்தாகலின். இதனைப் 'பூமேல் நடந்தான்' என்பதோர் பெயர் பற்றிப் பிஜீதோர் கடவுட்கு ஏற்றுவாரும் உளர். சேர்தல் - இடைவிடாது நினைத்தல்.

இவ்வுரையில் 'நிலமிசை நீடுவாழ்வார்' என்பதற்கு 'எல்லா உலகிற்கும் மேலாய வீட்டுலகின்கண் அழிவின்றி வாழ்வார்' எனப்

பொருள் கூறி 'நீடு' என்னும் சொல்லுக்கு 'அழிவின்றி' எனப் பரிமேலழகர் விளக்கம் தரக் காணலாம். இதனைச் சுட்டிக்காட்டும் அடிகளார் 'அழிவின்றி' என்பது வலிந்து கொள்ளப்பட்ட பொருளாகும் என்பார்.

இது இவ்வுலகில் நீண்ட காலம் வாழ்தலையே குறிக்கும்.

> அறமுதல் நாற்பொருளையும் கூறவந்த நாயனார் அவை தமக்கு நிலைக் களமாகிய நிலவுலகத்திலே மாந்தர் பிணியின்றி நெடுநாள் உயிர் வாழ்தலையும் இறைவழிபாட்டினால் அடைதற்குரிய ஒரு பெரும்பொருளாகக் கொண்டாரென வைத்து, அவர் நூற்குப் பொருள் காண்டல் அறிஞர்க்கு ஒருப்பாடாகுமென எண்ணுகிறேன். (ப.128)

இக்குறளுக்கு இவ்விடத்தில் இவ்வாறு பொருள் கொள்ளுதலே முறையென்பதற்கு அடிகளார் இன்னொரு காரணமும் கூறுவார். ஏழாம் குறளானது வீட்டுலக வாழ்க்கையைப் பேசுவதாகக் கொள்ள வேண்டியிருத்தலின் மூன்றாம் குறளுக்கு 'எல்லாவுலகிற்கும் மேலாகிய வீட்டுலகில் அழிவின்றி வாழ்வார்' எனப் பொருள் கொள்ளுதல் முறையன்று. வீடுபேறு அடைதற்கு இறைவனை நினைத்தல் மட்டும் போதாதென்றும் திருவள்ளுவர் கருத்தின்படி, வீடுபேறடைய முயல்வார் நினைத்தலோடமையாது இடைவிடாது வாழ்த்துதலும் இறைவன் காட்டிய மெய்யான ஒழுக்க நெறியின்கண் வழுவாது நிற்றலும் வேண்டுமென்பதைப் பிற குறள்கள் தெளிவுபடுத்துகின்றன என்பது அடிகளார் துணிபு.

> மலர் என்பதனை உள்ளக்கமலம் எனக் கொண்டு உள்ளக்கமலத்தில் சென்றவனது மாட்சிமைப்பட்ட அடிகளை இடைவிடாது நினைப்போர், 'அடிமையின் மிகை புணர்தர' நீண்ட காலம் பிணியின்றி உயிர்வாழ்வாரெனவும் அவர்தாம் வழிபடும் தலைவனைப் போல, வேண்டாமையாகிய விழுச்செல்வத்தினை எய்தி நிற்பாராதலின் ஈண்டும் (இவ்வுலகத்தினும்) ஆண்டும் (இனிவரும் உலகத்தினும்) இடும்பையிலராவர் எனவும், எப்பொழுதும் தம் புகழை மறந்து தலைவன் புகழைச் சொல்லும் இயல்பினராதலின், நல்வினை தீவினை இரண்டினையும் வென்று, நில்லாவுலகத்து நிலைபெற்ற புகழினை அடைவரெனவும் தலைவனைப் போலத்தாமும் ஐந்தவித்தும் மெய்யான ஒழுக்க நெறியினின்று வீடு பெறுவரெனவும் கொள்ளின் நினைத்தல் மாத்திரம் செய்வோர் அரனடிமையாகி மார்க்கண்டரைப் போலக்

காலனது ஆணையைத் தானும் கடந்து நிற்பாரென்பதும்... பெறப்படுவன. சுருங்கக்கூறின் நினைத்தலும் வாழ்த்தலும் கைகூடப்பெற்று நெறிநிற்றல் செய்தாரே வீடுபேறடைதற்குரியராதலின் மூன்றாம் குறள் வெண்பா வீடுபேறு கூறிற்றிலது என்பது முடிபு ஆகும். (ப.128)

அடிகளார் எத்தலைப்பில் பேசினும் எழுதினும் அத்தலைப்புப் பற்றி வள்ளுவர் கூறியுள்ளதைத் திருக்குறளிலிருந்து அகழ்ந்தெடுத்துத் தருதலைத் தம் கடமையாகக் கருதியவர் என்பது தேற்றம். "நாடும் நகரும்" என்னும் தலைப்பில் வரையும் கட்டுரையில்,

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு.

பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து.

இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற் குறுப்பு.

ஆங்கமைவு எய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு.

ஆகிய நான்கு குறள்கள் முன்னுரிமை பெறும்.

"கவியும் சால்பும்" என்னும் கட்டுரையில்,

அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு
ஐந்து சால்பூன்றிய தூண்.

என்னும் குறள் சால்பிற்கு நிலைபேறாவன இவையெனக் கூறிச் சால்பினது வரைவிலக்கணமாக அமையும் என்று போற்றப்படுகிறது.

"ஐயமும் அழகும்" என்னும் கட்டுரையில்

"நவில் தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு"

என்னும் குறள் "இன்பம்தரும் நூல் நயத்தினையும் இன்பம்தரும் பண்புடையாளர் தொடர்பினையும் ஒருங்கு வைத்து அழகானது அளத்தற்கரியதாய்த் துய்க்குந்தொறும் துய்க்குந்தொறும் வளர்ந்து தோன்றும்" நீர்மையினைக் காட்டுவதாய்ச் சிறப்பிக்கப்பெறும்.

"வண்ணமும் வடிவும்" என்னும் கட்டுரையில் கவிதை தரும் இன்பத்தைக் கீழ்க்கண்டவாறு கவிதை நடையில் விளக்குவார்:

கவிதையானது ஐம்புலன்களையும் மனத்தினையும் கவரும் ஆற்றல் வாய்ந்தது. மண்ணீட்டாளரும் கண்ணுள் வினைஞரும் கண்ணினையும் மனத்தினையும் கவர்வார். இசைவல்லோர் கண்டத்தினாலும் கருவியினாலும் உளத்தைக் கவர்ந்து, செவிக்கு அமுதளிப்பார்.

கண்டுகேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒன்றொடி கண்ணே யுள (110)

என விழைவு வயப்பட்ட தலைமகன் கூறுவது போலக் கவிச்சுவை தேர்வோன்,

கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்கவி கண்ணே யுள

எனக்கூறி விண்ணவரின்பத்தினும் மிக்க கவியின்பத்தை நுகர்வான். (ப.52)

'உணவு' என்னும் பொருள் பொதிந்த கட்டுரையில் வள்ளுவரின் உயர்வும் ஒரு குறளின் சிறப்பும் எடுத்துக்காட்டப்படுகின்றன.

திருவள்ளுவநாயனார், தேவரெனப் போற்றற்குரியராகித் தமது நூலினைக் கற்று, அதன்வழி நிற்போரை, இவ்வுலகிற்றானே தேவராக வாழச்செய்யும் ஆற்றலுடையராதலால், அதற்குத்தகச் செவிக்குணவில்லாத போழ்து வயிற்றுக்கும் சிறிது ஈயப்படும் என்று கட்டளையிட்டார். தெய்வ நூலுக்கு நல்லுரை கண்ட பரிமேலழகர், 'சுவை மிகுதியும் பிற்பயத்தலும் உடைய கேள்வியுள்ள பொழுது வெறுக்கப்படுதலான் இல்லாத போழ்தென்றும் பெரியதாயவழித் தேடல் துன்பமேயன்றி நோயும் காமமும் பெருகுதலான் சிறிதென்றும் அதுதானும் பின்னிருந்து கேட்டற் பொருட்டாகலான் ஈயப்படும் என்றும் கூறினார்' என்றார். (ப.146)

'இயலிசை நாடகம்' எனும் கட்டுரை, சமயக்கணக்கர் தம் திறம் சாராது நடுநிலைமேவி எப்பாலார்க்கும் பொதுவாகிய நெறியினைக் காட்டிய வள்ளுவர் வாய்மொழியானது யாம் எல்லா நலனையும் அடைதற்குரிய வழியினைக் காட்டுகிறது.

என்று வள்ளுவத்தின் பெருமையை நிலைநாட்டும்.

சொல்லியல் கோட்பாடு

பேரா **செ.வை.சண்முகம்**
மொழியியற்புலம் (ப.நி.),
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
சிதம்பரம்
கைபேசி : 98651 96476

சென்ற இதழின் தொடர்ச்சி

அந்த முறையில் 'உண்டு' என்பதை அடிநிலைக் கிளவியாகக் கொண்டு உள் என்ற மாற்றுருபு கொடுக்கப்பட்டுள்ளது. (குற்றியலுகரப்புணரியல் 25). உள் என்பது ஒரு அடிச்சொல், அதன் அடிப்படையில் உள்ளே உளர், உளது முதலிய சொற்கள் ஆக்கப்படுகின்றன. உள் என்பது கட்டுண்ட உருபன் என்பதால் உண்டு என்ற தனிநிலை வடிவத்திலிருந்து புணர்ச்சி மாற்றம் பெற்றதாக விளக்கப்பட்டுள்ளது. அந்தக் கோட்பாடு சிறப்பானதாகக் கொள்ளமுடியாது.

மூவிடப் பெயர்களும் அவைகளுக்கு உரிய தனிநிலை வடிவங்களிலிருந்து மாற்று உருபுகள் விளக்கப்பட்டுள்ளன.

நீ~நின் (உருபுப் புணரியல் 7), யான்~என், தாம்~தம், நாம்~நம் உருபுப் புணரியல் 16). ஆனால் நீயிர் என்ற முன்னிலைப் பன்மை வடிவம் நும் என்ற கட்டுண்ட வடிவத்தை அடிநிலைக் கிளவியாகக் கொண்டு புள்ளி மயங்கியலில் (31) விளக்கப்பட்டிருப்பது முரணே ஆகும்.

இங்கு சில வரலாற்று உண்மைகள் புதைந்துள்ளது. நீம் என்பது வரலாற்று பழமையான வடிவம். யான்/யாம், தான்/தாம் என்பதுபோல் நீன் என்ற வடிவமும் மாறுபட்டு நீ என்று அமைந்தாலும் வேற்றுமை ஏற்கும் நின் என்று இருப்பது நீன் என்று வரலாற்று நோக்கில் மீட்டுருவாக்கம் செய்யப்படுகிறது. அதை ஒட்டிப் பன்மை வடிவம் நீம் என்பது அமைந்தது பிற்காலத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதோடு நீங்கள் என்ற வடிவம் (<நீம்+கள்) இன்று வடிவமும் வழங்குவது அதை உறுதி செய்யும்.

ஆனால் சங்கத்தமிழ் தமிழ் வழக்கில் நீயிர் <நீ+இர் (வினைமுற்றில் வரும் முன்னிலை பன்மை வடிவம் (இர், ஈர், மின் (வினையியல் 27) சேர்ந்து உண்டாக்கப்பட்டுள்ளது.

அப்படியானால் *நிம் என்பதே வேற்றுமை ஏற்கும் வடிவமாக இருக்க வேண்டும். இன்றும் நிங்ஙள் <நிம்+கள் என்று வழங்குவதும் பிற தென்திராவிட நிம் இருப்பதும் அதை உறுதி செய்கிறது. ஆனால் சொல்லுக்கு இறுதி -இம் என்ற ஒலி சேர்க்கை அமையவில்லை. அதனால்தான் 'பெரிது', 'பெரிய' என்ற வடிவங்களுக்கு மாறாகப் 'பெரும்' என்ற வடிவம் அமைந்துள்ளதே தவிர *பெரிம் என்று அமையவில்லை. அதாவது தமிழில் சொல்லின் இறுதியில் -இம் என்ற தொடர் அமையாது. அந்த முறையிலே *நிம் என்ற ஒலித்தொடர் அமையாது நும் வடிவமாக மாறியுள்ளது. தொல்காப்பியம் நீ/நின், நீயிர்/நும் என்ற வடிவங்களையே குறிப்பிட்டுள்ளது. அதனால் நீயிர் வடிவம் வேற்றுமை வடிவமாக அமையும்போது நும் என்று மாறியது என்று விளக்குவதற்குப் பதிலாக நும் என்பதை அடிநிலைக்கிளவியாகக் கொண்டு அல்வழியில் நீயிர் என்று மாறியதாக விளக்கவிட்டார்.

வரலாறு பற்றிக் கவலைப்படாமல் விளக்கமுறை நோக்கில் விளக்கும் முயற்சியே தொல்காப்பியச் சொல்லியல் கோட்பாடு. அதனால்தான் தொண்ணூறு, தொள்ளாயிரம் என்ற சொற்களை முறையே ஒன்பது + பத்து, ஒன்பது + நூறு என்ற அடிநிலைக்கிளவி அமைத்து (குற்றியலுகரப் புணரியல் 40, 58) ஒலி (எழுத்து) மாற்றங்களாக விளக்கப்பட்டுள்ளது.

ஆனால் மொழியியல் நோக்கில் ஒன்பது என்பது தொள் என்ற வடிவமும் பத்து / நூறு என்பவை நூறு / ஆயிரம் என்ற மாற்று வடிவங்கள் பெற்றுள்ளதாகவே இன்று விளக்கப்படும். அதாவது அவை புணர்ச்சி மாற்றங்கள் பெற்றதாக விளக்குவது இல்லை.

அது போல எல்லா மொழியிலும் முழுவதும் மாறுபட்ட வடிவங்கள் மாற்றுருபாக சில சொற்களில் அமைந்துள்ளன. ஆங்கிலத்தில் கோ (go), வென்-ட், (wen-t), குட் (good) பெட்ட்-அர் (bett-er) என்பவை உதாரணங்கள்.

கட்டுண்ட உருபன்களில் அமைந்துள்ள மாற்றங்கள் பல கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

அ) மெய்யெழுத்துகளை முதலாகக் கொண்டுள்ள கு, கண் என்னும் இரண்டும் க்கு, க்கண் என்ற மாற்றுருபு பெற்றுள்ளதை 'வல்லெழுத்து முதலிய வேற்றுமை உருபு' என்று பொதுமைப்படுத்தி ஒரு சூத்திரத்திலேயே (புணரியல். 12)

புணர்ச்சி மாற்றமாக விளக்கப்பட்டுள்ளது சிறப்பானது. உண்மையில் -க்கு என்ற வடிவமே அதிகப் பயிற்சி உடையது. மணிக்கு, கதவுக்கு, பூக்கு. நாக்குக்கு, தாய்க்கு, தேர்க்கு, முதலியன. வேல் வேற்கு ஆள் ஆட்கு என்று குறைந்த சொற்களில் வருவதோடு வருமொழியிலும் மாற்றம் இருப்பதால் விளக்கமுறை மொழியியலார் -க்கு என்ற நாலாம் வேற்றுமை அடிநிலைக் கிளவியாகக் கொள்கிறார்கள்.

தமிழில் தனிமெய்யெழுத்து சொல்லுக்கு முதலில் வராததால் குகரத்தை அடிநிலைக் கிளவியாகக் கொண்டுள்ளார் எனலாம்.

கற்பித அடிநிலைக் கிளவி

அக்கு, இக்கு என்ற சாரியைகளாக வடிவங்களும் அந்த உண்மையை வலியுறுத்துகிறது. மேலும் கற்பித அடிநிலைக் கிளவி என்பதற்கு அமைகிறது.

தொல்காப்பியர் காலத்திலும் இன்றைய வழக்கு போல மாதப் (திங்கள்) பெயர்கள் இகரம் (வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, மார்கழி, மாசி, பங்குனி) ஐகாரம் (சித்திரை, கார்த்திகை, தை) அமைந்திருந்தன. (உண்மையில் அன்றைய வழக்கு இன்றும் தொடர்கிறது) உயிர்மயங்கியலில் இகர ஈற்றை வருணிக்கும் போது 'திங்கள் முன்னே இக்கே சாரியை' (46) ஐகார ஈறுகளை விளக்கும்போது திங்களும் நாளும் (நட்சத்திரம்) முந்து கிளந்தன்ன (84) என்று கூறியதால் திங்கள் பெயர் இங்குச் சாரியை பெறும் என்பது பெறப்படுகிறது.

இக்கு *மாற்று வடிவத்தைப் புணரியலில்* விளக்கப்பட்டுள்ளது. முன்னுள்ள சூத்திரத்தில் (23) 'அத்தின் அகரம் அகர முனை இல்லை' என்று கூறிவிட்டு அடுத்த இரண்டு சூத்திரங்களில் 'இக்கின் இகரம் இகரமுனை அற்றே' (24) 'ஐயின் முன்னரும் அவ்வியல் நிலையும்' (25) திங்கள் பெயர்களோடு புணரும்போது இக்கு என்பதன் இகரம் கெட்டே சேரும். உதாரணம் : ஆடிக்கு, சித்திரைக்கு, அப்படியானால் இக்கு வடிவம் எங்கும் சொற்களில் அமையாமல் -க்கு என்ற வடிவமே அமைகிறது.

உருபன் வடிவம் மொழி அமைப்பை ஒட்டி அமைய வேண்டும் என்ற தொல்காப்பியத்தின் கொள்கைபடி இக்கு என்ற கற்பித அடிநிலைக் கிளவி அமைந்துள்ளது என்று ஆகிறது.

உருபன் வகைப்பாடு

தொல்காப்பியம் பெயரியல் சொல்லின் பொது இலக்கணத்தை அடுத்து சொல் வகைப்பாடாக

சொல்லெனப்படுப பெயரே வினையென்று
ஆயிரண் டென்ப அறிந்திசி னோரே (4)

இடைச்சொல் கிளவியும் உரிச்சொல் கிளவியும்
அவற்றுவழி மருங்கில் தோன்றும் என்ப (5)

என்று விளக்கியிருப்பதால் பெயரும் வினையும் தனி நிலை உருபன்கள் என்றும் இடையும் உரியும் கட்டுண்ட உருபன்கள் என்றும் எண்ண இடம் கொடுக்கிறது. உண்மையில் முன்னதில் கருத்து வேறுபாடு இல்லை. பின்னது அவருடைய அவைகளின் விளக்கமே குறிப்பாக உரிச்சொல் விளக்கம் ஒரு வகையில் தனிநிலை உருபன்கள் என்றும் இடைச்சொல் விளக்கம் தனிநிலை உருபன்களும் கட்டுண்ட உருபன்கள் கலந்தவை என்பதை உணர்த்துகின்றன.

வினையில் தெரிநிலை குறிப்பு என்ற பாகுபாடு சொல்லியல் சிறப்பானது. தொல்காப்பிய வினை, குறிப்பு ('குறிப்பினும் வினையினும்' வினையியல்.4) பிற்காலத்திலிருந்து தெரிநிலை குறிப்பு என்று வேறுபடுத்தப்படுகிறது.

குறிப்பு வினை என்பது பெயர்களே, எனவே அந்தப் பாகுபாடு தேவை அற்றது என்று இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாதிட்டாலும் கட்டமைப்பு மொழி நோக்கில் அந்தப் பாகுபாடு சிறப்பானது என்று நிறுவப்பட்டுள்ளது (சண்முகம், 1992:56-104) இது தொல்காப்பியத்தின் சொல்லியல் நுண்மாண் நுழைபுலத்துக்கு ஒரு சான்று.

உரியியலில் ஒரு நிலையில் சொற் பொருண்மையியலின் முக்கிய கருத்தும் அகராதியியலுக்கு முன்னோடியாக அரிய சொற்களுக்குப் பொருள் தரப்பட்டுள்ளது என்பது ஒன்று. பெயராகவும் வினையாகவும் இல்லாமல் பெயரடையாகவும் வினையடையாகவும் வரும் தனி நிலை உருபன்கள் சொற்களும் விளக்கப்பட்டுள்ளது என்பது இரண்டு. பெயரடையாகவும் (உறு, தவ, தட, கய, நளி, வய) வினையடையாகவும் (நனி, துவர, முற்ற நயம்) வரும் தனிநிலை உருபன்கள் அதை வேறு கட்டுண்ட உருபன்களையும் ஏற்காது என்ற முறையில் உரிச்சொல் என்ற சிறப்புச் சொல்வகைப்பாட்டில் அடங்கும்.

இடையியலில் தொல்காப்பியமே முதல் சூத்திரத்தில்

இடையெனப் படுப பெயரொடும் வினையொடும்
நடைபெற்றி யலும் தமக்கியல்பு இலவே (2)

என்பதால் இடைச்சொல் கட்டுண்ட உருபன்கள் என்று ஆகிறது. அதற்கு ஏற்ப அடுத்த சூத்திரத்தில் 'புணரியல் நிலையிடை பொருள்நிலைக் குதவுநவும்' என்பது சாரியையும், வினைசொல் மருங்கிற் காலமொடு வருனவும்' என்பது கால உருபன்களையும், 'வேற்றுமைப் பொருள் வயின் உருபாகுனவும்' என்பது வேற்றுமை உருபுகளையும் குறிப்பது தெளிவு. இவை கட்டுண்ட உருபன்கள்.

அதே சூத்திரத்தில் குறிப்பிட்ட அசைநிலைக்கிளவி, இசைநிறைக் கிளவி, தத்தம் குறிப்பில் பொருள் செய்குன, ஒப்பில் வழியால் பொருள் செய்குன ஆகியவைகளில் புதிய தனிநிலை உருபன்களும் கட்டுண்ட உருபன்களும் அடங்கியுள்ளன. அவைகளில் தனிநிலை உருபன்கள் கூடுதலான கட்டுண்ட இடைச்சொல் உருபன்களை (உம், ஏ, ஓ) ஏற்பது சிறப்பு பண்பு.

தனிநிலை உருபன்கள்

1. அடிச்சொற்கள் (கொன், தஞ்சம், எல்)

2. கட்டுண்ட அடிச்சொற்கள் (மற்றை, பிற)

3. விகுதி ஏற்காமல் வாக்கியத்தின் புறத்துறுப்பாய் வருபவை

அம்ம, அன்றோ, அந்தோ, நன்றே, அன்றே, ஏ-, ஓ- ஔ-

4. விகுதி ஏற்காமல் வாக்கியத்தின் அகத்துறுப்பாய் வருபவை

மன்ற, போலும் (ஒப்பில் போலி) அந்தில், ஏற்று

5. கட்டுண்ட உருபன்கள்

வேற்றுமை உருபு, திணை-பால் உருபன்கள், ஏவல், வியங்கோள் உருபன்கள்

6. இன்னொரு உருபன் ஏற்பவை

மன் (மன்னே), கொல் (கொல்லோ)

எந்த விகுதியும் எல்லாச் சொற்களோடும் வருபவை

உம் (அவரும், அவரையும்... தலைவனும் தலைவியும். வந்தும் ஓடியும்,)

ஏ (அவரே, அவரையே, வந்ததே (தெரியாது) கொன்னே

தொல்காப்பியத்தில் சொல்லியல் செய்திகள்

நூன் மரபு = சுட்டுச்சொற்கள் (31), வினாச் சொற்கள் (32) இரண்டும் கட்டுண்ட உருபன்கள்

மொழி மரபு =

ஓரெழுத்து ஒருமொழி ஈரெழுத்து ஒரு மொழி
இரண்டிறந்து இசைக்கும் தொடர்மொழி உளப்பட

மூன்றே மொழிநிலை தோன்றிய நிலையே (12)
மொழி = சொல், தனிநிலை உருபன்களின் எழுத்து அமைப்பு

நெட்டெழுத்து ஏழே ஓரெழுத்து ஒரு மொழி (10)

குற்றெழுத்து ஐந்தும் மொழி நிறைபு இலவே (11)

தனிநிலை உருபன்களின் எழுத்து வடிவம்.

புணரியல் = வேற்றுமை உருபுகள் (11) அவைகளின் மாற்று வடிவங்கள் (12, 13)

வேற்றுமை உருபு பெயர்களோடு வரும் (14)

பெயர்கள் உயர்திணை, அஃறிணை என்ற இரண்டு வகை (15)

சாரியையின் பகிர்வு 'அவற்று வழி மருங்கு' (16) உரை -

பெயருக்கும் வேற்றுமைக்கும் நடுவில்

சாரியையின் தொகை (17)

அவைகளின் மாற்று வடிவங்கள் (18-29, 31)

சாரியைகளின் பொதுப் பண்பும் ஒடு வேற்றுமையும் சாரியை பகிர்வும் (30)

இலக்கண வருணனையில் எழுத்து வரும் சாரியைகள் (32)

அவற்றின் பகிர்வு (33-5)

உருபியல் = சாரியைகளின் பகிர்வும் சாரியைகளின் மாற்று வடிவங்கள் (1-6, 8-29)

பெயர் சொற்கள் வேற்றுமை உருபு ஏற்கும் அமையும் மாற்று வடிவம் (7)

சொல்லதிகாரம்

கிளவியாக்கம்

பெருநிலை இலக்கணக் கூறுகள்

திணை - பால் (பெயருக்கும் வினைக்கும் பொது) (1-3)

பண்பாட்டு நோக்கில் சில சொற்களின் (பேடி, தெய்வம்) உயர்திணைப் பால் (4)

வினையில் பால் விகுதிகள் (5-10)

வேற்றுமையியல்

வேற்றுமை தொகை – 8 (1, 2)

வேற்றுமை உருபுகள் (3)

வேற்றுமையின் பெயர்களும் அவற்றின் உருபுகளும் (10, 12, 14, 16, 18, 20-21)

வேற்றுமை மயங்கியல்

பொருண்மையியல் நோக்கில் வேற்றுமை பயன்பாடு

சில வேற்றுமை உருபுகளின் மாற்று வடிவம் (25-6)

விளி மரபு

விளி வேற்றுமை ஏற்கும் பெயர் சொற்கள் அடையும் மாற்று வடிவம்

பெயரியல்

சொல்லின் பொது இலக்கணம் (1-3)

சொல் வகைப்பாடு பொது (4-5)

பெயர்ச்சொற்களின் திணைபால் பாகுபாடு

விரவுப் பெயர் என்ற கூடுதல் வகை (18)

வினையியல்

மொழி அமைப்பு நோக்கில் விளக்கம். 'வேற்றுமை கொள்ளாது காலமொடுதோன்றும்' (1)

கால வகை மூன்று (2)

வினைமுற்றுகள் (காலமொடு வரும் சொற்களின்) திணை - பால் - இடம் உணர்த்தும் (4) அந்த அடிப்படையில் பாகுபாடு அதாவது உருபன்கள் பாகுபாடு (5-24)

விரவு வினை (25) அவைகளின் உருபன்கள் (26-8)

இடையியல்

உருபன்களில் பாகுபாடு காலம், வேற்றுமை அசைச்சொல், இசைச்சொல்

மொழி முதல் ஞகரம்

பேராசிரியர் **இரா.கோதண்டராமன்,**
தொல்காப்பியர் அடிப்படை ஆய்வு மையம்,
19, தொல்காப்பியர் தெரு, அசோக்நகர்,
புதுச்சேரி - 605008
கைபேசி : 9443151044

தமிழ் நெடுங்கணக்கில் ஐ, ஔ உட்பட பன்னிரெண்டு உயிர்களும், பதினெட்டு மெய்களும் ஆக முப்பது ஒலியன்கள் காணப்படுகின்றன. இவை தவிர சார்ந்தொலிகளாகக் குற்றியலுகரமும், குற்றியலிகரமும், ஆய்தமும் தொல்காப்பியரால் இனங்காணப்படுகின்றன. இவற்றுள் குற்றியலுகரம் முற்றியலுகரத்தின் சார்ந்துருபாகவும், குற்றியலிகரம் முற்றியலிகரத்தின் சார்ந்துருபாகவும் கொள்ளப்படும். ஆய்தம் தன்னை அடுத்துவரும் வல்லொலியின் பண்புகளைக் கொள்வதால் அதனை நுண்ணொலியனாக (Archi Phoneme) கருதலாம். ஐகார ஔகாரங்கள் இந்த ஆய்வில் தனி ஒலியன்களாகக் கொள்ளப்படவில்லை. இது பற்றி இந்தத் தொகுப்பில் ஏற்கனவே விரிவாகப் பேசப்பட்டுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு உயிரொலியன்கள் பத்தாகக் கொள்ளப்படும். அவை அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஒ, ஓ என்பனவாகும். இவை முதன்மை உயிரொலியன்களாக ,இங்கே கொள்ளப்படுகின்றன. மெய்யொலியன்களைப் பொறுத்தவரை மரபிலக்கணிகள் பதினெட்டாகக் குறிப்பிட்டாலும் அவை இந்த ஆய்வில் முதன்மை மெய்யொலியன்கள் என்றும் திரிபு மெய்யொலியன்கள் என்றும் இரண்டு வகையினவாகக் கொள்ளப்படும். ற, ட, ன, ண ஆகிய நான்கும் திரிபொலியன்களாகவும் ஏனையவை முதன்மை ஒலியன்களாகவும் கருதப்படும். இவ்வாறு கருதப்படுவதற்குக் காரணம் இந்த நான்கு மெய்யொலியன்களும் சந்தியின் வாயிலாகப் பெறத்தக்கனவாகும்.

2. அகச்சந்தி, புறச்சந்தி ஆகிய இருவகைச் சந்திகளின் வாயிலாக மேலே குறிப்பிட்ட ற, ட, ன, ண ஆகிய நான்கு திரிபு மெய்யொலியன்களும் பெறப்படும். இந்த வகையில் பின்வரும் எடுத்துக்காட்டுக்கள் கருத்தில் கொள்ளத்தக்கனவாகும்.

1. அகச்சந்தி

1 (1) நலும் > நல்ம் > நன்ம் > நன் + து > நன்று

(2) உளும் > உள்ம் > உண்ம் > உண் + து > உண்டு

2 (1) வல் + த்து > வல் + ற்று > வற்ற்று > வற்று 'வல்லது'

(2) நள் + ப்பு > நட் + ப்பு > நட்ப்பு > நட்பு

3 (1) செல் + ந்து > செல் + ன்று > சென்ன்று > சென்று

(2) தோள்+ந்து > தோள்+ண்டு > தோண்ண்டு > தோண்டு

2. புறச்சந்தி

4 (1) நெல்-க்+கதிர் > நெல்க்கதிர் > நெற்க்கதிர் > நெற்கதிர்

(2) முள்-ப்+புதர் > முள்ப்புதர் > முட்ப்புதர் > முட்புதர்

மேலே (4)-இல் காணப்படும் நெற்கதிர், முட்புதர் ஆகியவற்றின் அடிநிலை வடிவங்கள் *நெலும் + கதிர், *முளும் + புதர் என இனங்காணத்தக்கவையாகும். இவை *நெல்க்கதிர், *முள்ப்புதர் எனப் பின்வருமாறு திரிந்தமையும்.

5(1)*நெலும்+கதிர் >*நெலுங்கதிர் >*நெலுக்கதிர் >*நெல்க்கதிர்

(2) *முளும் + புதர் > *முளுப்புதர் > *முள்ப்புதர்

இங்கே (5)-இல் காணப்படும் சந்தியானது தொல் சந்தி மரபிற்கு உரியனவாகும். அதாவது, மெல்லொற்றை அடுத்து நிகழும் வல்லொற்றானது நிலையொலியாக (Voiceless Phone) நிகழ்வதால் மெல்லொற்று வல்லொற்றாகத் திரிகின்றது. இதன் விளைவாகத்தான் *நெல்க்கதிர், *முள்ப்புதர் ஆகிய வடிவங்கள் தோன்றி நிகழ்கின்றன. இத்தகைய வடிவங்களின் நிகழ்ச்சி இன்றும் மலயாளத்தில் காணப்படுகின்றது. *நெலும், *முளும் ஆகியவற்றில் காணப்படும் உம் என்பது இங்கே சாரியையாகக் கருதப்படுகின்றது. இந்தச் சாரியையில் நிகழும் உகரம் கெடுவதால் *நெல்ம், *முள்ம் ஆகிய வடிவங்கள் தோன்றி அமைகின்றன. தொல்காப்பியர் எழுத்தியல் ஆய்வுப்படி *நெல்ம் + கதிர், *முள்ம் + புதர் ஆகிய வடிவங்களில் காணப்படும் மகரம் கெட்டு வருமொழி முதல் வல்லொற்று அங்கே தோன்றி நிகழ்கிறது. இதன் விளைவாக *நெல்க்கதிர், *முள்ப்புதர் ஆகிய வடிவங்களின் நிகழ்ச்சி தோற்றம் கொள்கின்றது. இந்த வடிவங்களே பின்னர் நெற்கதிர், முட்புதர் எனத் தொல் சந்தியின் வாயிலாகத் தோற்றம் கொள்கின்றன.

3. னகர ணகரங்களும் றகர டகரங்களும் மேல் எடுத்துக்காட்டுக்களில் முறையே லகர ளகரங்களின் திரிபாக நிகழ்ந்தாலும் அவை முரண் வழக்கில் (Contrastive Distribution) நிகழ்வதால் ஒலியன்களாகக் கொள்ளத்தக்கனவாகின்றன. எ.டு. **மனம் - மணம், மறம் - மடம்**. மேலே குறிப்பிட்ட நான்கு ஒலியன்களும் லகர ளகரங்களின் திரிபாகவும் நிகழ்வதால் அவற்றைத் திரிபொலியன்கள் என்று கருத நேரிடுகின்றது.

4. தமிழில் ஞகரம் ஒரு நெருடலான ஒலியனாகும். தொல்காப்பியர் தமிழில் ஞகரம் **உரிஞ்** என்ற ஒரே ஒரு சொல்லில்தான் மொழியிறுதியில் நிகழ்கின்றது. மொழியிடையில் **அஞ்ஞை, மஞ்ஞை** ஆகிய சொற்களில் ஞகரம் தமிழில் இரட்டித்தும் **அறிஞர்** (நற்.314.2), **களைஞர்** (குறு.392.5) முதலிய எடுத்துக்காட்டுக்களில் ஐகாரத்தை அடுத்து நிகழ்ந்தாலும் அதன் நிகழ்ச்சி சகரத்தோடு இணைந்தும் காணப்படுகிறது. எ.டு. **பஞ்சு, நஞ்சு, கெஞ்சு, அஞ்சு** முதலியன. மொழியிடையில் **பஞ்சு, பண்டு, பந்து, பங்கு, கம்பு, பன்றி** ஆகிய சொற்களில் மெல்லெழுத்துக்கள் முரண் வழக்கில் நிகழ்கின்றன. ஆனால், ஞகரத்தைப் பொறுத்தவரை மொழி முதலில் 36 சொற்களில் நிகழ்கின்றன. இவற்றுள்ளும் சில சொற்கள் நகரத்திலும் அவற்றிற்கு இணையாக மலயாளத்தில் ஞகரத்திலும் மொழி முதலில் நிகழ்கின்றன. இதனை இந்த எழுத்துரையின் பிற்சேர்க்கையில் காணலாம். மொழி முதலில் தமிழில் ஞகரமாக நிகழும் பல சொற்கள் நகரமாகவும் நிகழ்கின்றன. பின்வரும் எடுத்துக்காட்டுக்கள் இந்த வகையில் கருத்தில் கொள்ளத்தக்கனவாகும்.

6 (1) ஞண்டு / ஞெண்டு - நண்டு (DED/2901)

(2) ஞரல் / ஞெரல் - நரல் (DED.2904)

(3) ஞாஞ்சில் - நாஞ்சில் (DED.2907)

(4) ஞாண் - நாண் (DED.2908)

(5) ஞாயிறு - நாயிறு (DED.2910)

(6) ஞால் - நால் (DED.2912)

(7) ஞாழல் - நாழல் (DED.2915)

(8) ஞாளி - நாளி (DED.2916)

(9) ஞாறு - நாறு (DED.2918)

(10) ஞான்று - நான்று (DED.2920)

(11) ஞிமிர் - நிவீர் (DED.2922)

(12) ஞெகிழ் - நெகிழ் (DED.2923)

(13) ஞெகிழி - நெகிழி (DED.2924)

(14) ஞெரி - நெரி (DED.2927)

(15) ஞெளி - நெளி (DED.2930)

(16) ஞெளிர் - நெளிர் (DED.2932)

மேலே குறிப்பிட்ட பதினாறு சொற்களில் மொழி முதலில் ஞகரமும் நகரமும் உறழ்ந்து நிகழ்கின்றன. இத்தகைய நிகழ்ச்சியானது மேற்படி சொற்களில் மொழி முதலில் நகரம் ஞகரமாகத் திரிந்ததா அல்லது ஞகரம் நகரமாகத் திரிந்ததா என்ற வினாவை எழுப்புகிறது. இந்தச் சொற்களில் ஞகரம் நகரமாகத் திரிந்ததாகக் கருதப்படுவதும் உண்டு. நகரம் நாவின் நுனி, பல்லின் அடியில் பொருந்துவதால் பிறக்கும் ஒலியாகும். ஆனால், ஞகரம் நாவின் இடைப்பகுதி இடையண்ணத்தைப் பொருந்துவதால் பிறப்பதாகும். இத்தகைய நிலையில் ஞகரம் நகரமாகத் திரிவதற்கான வாய்ப்பு அரிதாகவே காணப்படுகிறது. ஆனால், நகரத்தை அடுத்து யகரம் ஒத்திசைப்பதால் (Coarticulation) ஞகரம் தோன்றுவதற்கு வாய்ப்பு உண்டு. எடுத்துக்காட்டாக **நியாயம்** (<**ந்யாயம்**) என்ற வடசொல் பேச்சுத்தமிழில் **ஞாயம்** என வழங்குகிறது. இந்தத் திரிபிற்குக் காரணம் மொழி முதலில் நிகழும் நகர மெய்யையடுத்து யகரம் ஒத்திசைப்பதேயாகும். இதனைக் கருத்தில் கொண்டு மேலே தமிழில் குறிப்பிட்ட பதினாறு சொற்களிலும் மொழி முதல் நகரத்தையடுத்து யகரம் ஒத்திசைப்பதன் காரணமாக ஞகரம் தோற்றம் கொள்வதாகக் கருதலாம். இதனைப் பின்வருமாறு விளக்கலாம்.

7 (1) நாயிறு > ந்யாயிறு > ஞாயிறு

(2)நான்று > ந்யான்று > ஞான்று (நான்று என்ற சொல் தெலுங்கில் நாண்டு என நிகழ்வது இங்கே கருத்தில் கொள்ளத்தக்கதாகும்)

மேலே 7-இல் காணப்படும் விளக்கத்தினைப் பின்புலமாகக் கொண்டு தமிழிலும் மலயாளத்திலும் நிகழும் மொழி முதல் ஞகரச் சொற்களை மொழி முதல் நகரச் சொற்களாக மீட்டுருவாக்கம் செய்யலாம். இதற்குப் பின்புலமாகப் பக்தி இலக்கியங்களில் நிகழும் **நாயிறு, நான்று** ஆகிய சொற்களையும் கருத்தில் கொள்ளலாம்.

5. **நாயிறு, நான்று** ஆகிய இரு சொற்களும் ஆழ்வார் பாசுரங்களில்

இடம்பெற்றுள்ளன. அரிதாக இவர்கள் பாசுரங்களில் **ஞாயிறு, ஞான்று** ஆகியவையும் காணப்படுகின்றன. இந்த வகையில் பின்வரும் எடுத்துக்காட்டுக்களைக் கருத்தில் கொள்க.

8 (1) செந்நாயிறு (நம்.இயற்பா.திருவிருத்தம் 82)
(2) கருநாயிறு (நம்.திருவாய்.8.5.2,7; நம் இயற்பா.திருவிருத்தம் 17)
(3) இருநாயிறு (நம்.இயற்பா. திருவாசிரியம் 5.7)
(4) நாயிற்றின் (நம்.திருவாய்.8.10.8)
(5) மறைந்தது நாயிறு (நம்.இயற்பா.திருவிருத்தம் 80)
(6) இளஞாயிறு (நம்.திருவாய்.8.5.5)

9 (1) உலகளந்த நான்று (நம்.இயற்பா. முதல் திருவந்தாதி 17)
(2) ஒரு நான்று (நம்.இயற்பா. திருவிருத்தம் 5; திருமழிசை, நான்முகன் திருவந்தாதி 5)
(3) அந்நான்று (திருமழிசை, இயற்பா. நான்முகன் திருவந்தாதி 16
(4) உரலோடு உறப்பிணித்த ஞான்று (நம்.இயற்பா.முதல் திருவந்தாதி 24)

6. நகரம் ஞகரமாத் திரிந்தும் திரியாமலும் நிகழும் நிகழ்ச்சி தமிழிலும் மலயாளத்திலும் மட்டுமே காணப்படுகிறது. பிற திராவிட மொழிகளில் நகரம் ஞகரமாகத் திரியும் நிலை காணப்படவில்லை. தமிழிலும் மலயாளத்திலும் மொழிமுதல் நகரம் ஞகரமாகத் திரியாத பல சொற்கள் காணப்படுகின்றன. இதனைக் கருத்தில் கொண்டு அக்காலச் சேரநாட்டுத் தமிழில் ஒரு குறிப்பிட்ட கிளைமொழியில் இந்தத் திரிபு நிகழ்ந்து பின்னர் செவ்வியல் தமிழில் இத்தகைய திரிபிற்கு இலக்கான சொற்கள் இடம்பெற்றனவாகக் கருதலாம்.

7. இடைப்பிறவரலாக இங்கே ஒரு செய்தியைக் குறிப்பிட வேண்டும். தந்நகரமும், றன்னகரமும் இக்காலத் தமிழில், குறிப்பாகப் பேச்சுத்தமிழில், முரண் வழக்கில் நிகழும் நிலை காணப்படவில்லை. தந்நகரம் மொழியிடையில் நிகழும் போது அதனை அடுத்து தகர மெய்யின் நிகழ்ச்சியே காணப்படுகிறது. எ.டு. **பந்து, உந்து, கொந்து, சந்து, சிந்து, நீந்து** முதலியன. இதனின்றும் தந்நகரம் துணைநிலை வழக்கில் நிகழும் ஒலியாகவே இக்காலத் தமிழில் காணப்படுகிறது. ஆயினும், மலயாளத்தில் தந்நகரமும் றன்னகரமும் முரண் வழக்கில் இன்றும் நிகழும் நிலை காணப்படுகிறது. தொல்காப்பியரும் தகர

நகரங்களின் பிறப்பினை ஒருதிறத்தினதாகவும் றகர னகரங்களின் பிறப்பை ஒருதிறத்தினதாகவும் குறிப்பிடுவதைப் பின்வரும் நூற்பாக்களின் வாயிலாகத் தெளியலாம்.

10. அண்ணம் நண்ணிய பல்முதல் மருங்கின்
நாநுனி பரந்து மெய்யுற ஒற்றத்
தாம்இனிது பிறக்குந் தகார நகாரம் (எழுத்து.இளம்.93)

11. அணரி நுனிநா அண்ணன் ஒற்ற
றஃகான் னஃகான் ஆயிரண்டும் பிறக்கும் (எழுத்து.இளம்.94)

இதனின்றும் தந்நகரமும் றன்னகரமும் பழந்தமிழில் முரண் வழக்கில் நிகழ்ந்தன என்பது தெளிவாகின்றது.

8. தமிழ் நெடுங்கணக்கின் வரிவடிவம் தமிழ் - பிராமி நெடுங்கணக்கின் தாக்கத்தால் தோன்றியது என்ற ஒரு கருதுகோளும் உண்டு. பிராமி நெடுங்கணக்கில் றன்னகரத்திற்கு இடமில்லை. ஆனால், தந்நகரம் அந்த நெடுங்கணக்கில் காணப்படுகிறது. அதே சமயத்தில் மெய்யெழுத்துக்களைப் பொறுத்தவரை பிராமி நெடுங்கணக்கின் தாக்கமும் தமிழில் காணப்படுகின்றது. வல்லொற்றுக்களைப் பொறுத்தவரை அவற்றின் வைப்புமுறை தமிழில் க, ச, ட, ற, த, ப என்றே ஒலிப்புறுப்புக்களின் இயக்கம் சார்ந்த வரிசையில் அமைய வேண்டும். இந்தக் கூற்று மெல்லெழுத்துக்களின் வைப்புமுறைக்கும் பொருந்தும். தமிழைப் பொறுத்தவரை ஆறு வல்லெழுத்துக்களுக்கு இணையாக ஆறு மெல்லெழுத்துக்களும் அமைந்துள்ளது ஏற்புடையதேயாகும். ஆயினும், வைப்புமுறையில் நிகழ்ந்த மாற்றம் பிராமி நெடுங்கணக்கின் தாக்கத்தால் நிகழ்ந்தது என்பதை மறுக்க முடியாது.

9. இந்த எழுத்துரையை முடிப்பதற்குமுன் ககரத்தின் இனமெல்லொற்றாகிய ஙகரத்தைப் பற்றியும் குறிப்பிட வேண்டும். ஙகரம் தமிழில் ககரத்தின் முன் மட்டுமே நிகழும் நிலை காணப்படுகிறது. எ.டு. பங்கு. மொழிமுதலிலும் மொழி இறுதியிலும் உயிரிடையிலும் இந்த மெல்லொற்று நிகழ்வதில்லை. ஆயினும், தொல்திராவிட மெய்யொலியன்களில் ஙகரமும் ஒன்றாக மீட்டுருவாக்கம் செய்யப்படுகிறது. இதன் தோற்றம் ககரத்தின் முன் மகரம் ஙகரமாகத் திரிவதன்மூலம் தோன்றியதாகக் கருதலாம். ஆனால், இதற்கான சான்றுகள் எதுவும் இப்போதைக்குக் காணப்படவில்லை.

பிற்சேர்க்கை

தமிழிலும் மலயாளத்திலும் நகர மொழிமுதல் சொற்கள் ஞகர மொழிமுதல் சொற்களாகத் திரிந்தும் திரியாமலும் காணப்படுகின்றன. அத்தகைய சொற்கள் கீழே தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

1. தமிழ்.ஞண்டு/ஞெண்டு,நண்டு.மலயாளம் ஞண்டு, நண்டு (DED.2901)
2. தமிழ். ஞமலி. தெலுங்கு. நெமலி. (DED.2902)
3. தமிழ். நரம்பு. மலயாளம். ஞரம்பு, நரம்பு (DED.2903)
4. தமிழ்.ஞரல்,நரல்,மலயாளம்,ஞரங்நு,நரங்நு, கன்னடம்.நரல் (DED.2904)
5. தமிழ். நளி. மலயாளம். ஞளுங்நுக (DED.2905)
6. தமிழ். நாங்கூழ். மலயாளம். ஞாங்நூழ் (DED.2906)
7. தமிழ். நாஞ்சில், ஞாஞ்சில். மலயாளம். நேஞ்ஞில்.தெலுங்கு.நாங்கேலு (DED.2907)
8. தமிழ்.ஞாண், நாண். மலயாளம்.ஞாண் (DED.2908)
9. தமிழ். நாணல். மலயாளம். ஞாணல் (DED.2909)
10. தமிழ். ஞாயிறு, நாயிறு. மலயாளம். ஞாயிறு. கன்னடம். நேசறு (DED.2910)
11. தமிழ். நாரை. மலயாளம். ஞார, நார (DED.2911)
12. தமிழ். ஞாள், நாள். மலயாளம். ஞாலுக. கன்னடம். நேல் (DED.2912)
13. தமிழ். ஞாலம். மலயாளம். ஞாலம். தெலுங்கு. நேல, நால (DED.2913)
14. தமிழ். நாவல். மலயாளம். ஞாவல் (DED.2914)
15. தமிழ். ஞாழல், நாழல். மலயாளம். ஞாழல். கன்னடம். நேழல் (DED.2915)
16. தமிழ். ஞாளி, நாளி, ஞமலி (DED.2916)
17. மலயாளம். ஞாறல், ஞேறல். கன்னடம். நேரல் (DED.2917)
18. தமிழ். ஞாறு, நாறு. மலயாளம். நாறுக, நாற்றம். கன்னடம். நாறு (DED.2918)
19. தமிழ். நாற்று, நாறு. மலயாளம். ஞாறு. தெலுங்கு. நாறு (DED.2919)
20. தமிழ். ஞான்று, நான்று. மலயாளம். ஞாந்நு. தெலுங்கு. நேண்டு/நாண்டு (DED.2920)
21. தமிழ். ஞிணம், நிணம். மலயாளம். நிணம். கன்னடம். நெண(DED.2921)
22. தமிழ். ஞிமிர், நிமிர். மலயாளம். நிவிருக. கன்னடம். நிமிர் (DED.2922)

23. தமிழ். ஞெகிழ், நெகிழ். மலயாளம் (DED.2923)
24. தமிழ். ஞெகிழி, நெகிழி, நெகிடி, தெலுங்கு, நெகடி (DED.2924)
25. தமிழ். நெட்டு. மலயாளம். ஞெட்டு (DED.2925)
26. தமிழ். ஞெமி, ஞெமுக்கு, நிமிட்டு, நிமிடு. மலயாளம். ஞமுண்டுக (DED.2926)
27. தமிழ். ஞெரி, நெரி. மலயாளம். ஞெரியுக, நெரியுக (DED.2927)
28. தமிழ். நெருஞ்சி, நெருஞ்சில். மலயாளம். ஞெருஞ்ஞில் (DED.2928)
29. தமிழ். நெருப்பு. மலயாளம். ஞெரிப்பு. தெலுங்கு. நிப்பு (DED.2929)
30. தமிழ். ஞெலி, ஞெலிகோல் (DED.2930)
31. தமிழ். ஞெள், ஞெளி, நெளி, கன்னடம். நள்ளு. துளு. நலி (DED.2931)
32. தமிழ். ஞெள், ஞெளிர், நெளிர். மலயாளம். ஞெள்ளு. கன்னடம். நெள்ளு (DED.2932)
33. தமிழ். நெளி. மலயாளம். ஞெளியுக. கன்னடம். நளி (DED.2933)
34. தமிழ். நெறி. மலயாளம். ஞெறி, நெறி. கன்னடம். நெறி. தெலுங்கு. நெறி (DED.2934)
35. தமிழ். நெறி. மலயாளம். ஞெறி. துளு. நெரி. தெலுங்கு. நெறி (DED.2935)
36. தமிழ். நொடி. மலயாளம். ஞொடி, நொடி (DED.2936)

சுருக்க விளக்கம்

திருமழிசை - திருமழிசை ஆழ்வார்
திருவாய் - திருவாய்மொழி
நம் - நம்மாழ்வார்

சங்கச் செய்திகள்

09.05.2019 அன்று கவிஞர் இரவீந்திரநாத் தாகூர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சங்க வளாகத்தில் நினைவுக் கூட்டம் நடைபெற்றது. முதல்வர் முனைவர் கி.வேணுகா அவர்கள் தமது உரையில் 'இரவீந்திரநாத் தாகூர் அவர்கள் இந்தியக் கலைகளிலும், வங்காள இலக்கியம் மற்றும் இசை வடிவங்களிலும் பெரும் மாற்றங்களைக் கொண்டு வந்தவர். இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்ற பெருமைக்குரியவர். இந்தியா மற்றும் வங்காளதேசத்தின் தேசிய கீதங்களை எழுதியவர். விசுவபாரதி எனும் பல்கலைக்கழகத்தை நிறுவியவர். ஓவியர். இந்தியக் கல்விச் சூழலுக்காகக் கனவு கண்டவர். சுவாமி விவேகானந்தரின் ஆசிரியர்' எனக் குறிப்பிட்டார்.

27.05.2019 அன்று மாலை 5 மணியளவில் மலேசியாவில் உள்ள உலகத் தமிழ் காப்பிய ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த மலேசிய மகா கணேச வித்யாசாலை தமிழ்ப் பள்ளி தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட 33 பேர் கொண்ட குழு, மலேசியக் கல்வி அமைச்சக தொழில்நுட்ப அதிகாரி தினேசு பாலகிருஷ்ணன் மற்றும் குணாளன் அவர்கள் தலைமையில் சங்கத்திற்கு வருகை புரிந்தனர். பாண்டியன் நூலகத்திலுள்ள அரிய நூல்களையும் ஓலைச் சுவடிகளையும் பார்வையிட்டனர். மலேசியக் குழுவினரை செந்தமிழ்க் கல்லூரி மேனாள் மாணவர் சங்கத் தலைவர் மு.இளங்கோவன் மற்றும் புலவர் சங்கரலிங்கம் ஆகியோர் வரவேற்றனர். சங்கச் செயலர் வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி அவர்கள் தலைமை வகித்தார். கல்லூரி முதல்வர் மற்றும் துணைமுதல்வர் சங்கம் மற்றும் கல்லூரியின் சிறப்புகள் குறித்து உரையாற்றினர். இந்திய, மலேசியக் கல்வித்திட்டம், தமிழ்மொழிப் பாடத்திட்டங்கள் குறித்து பேராசிரியர்களோடு மலேசியக் குழுவினர் கலந்துரையாடினர்.

நம்பவே இல்லை

பாவேந்தர் பாரதிதாசன், (தேனருவி)

இனியுமோர் தமிழ்ச் சங்கம் காண்பேன்
இருந்த முதலிடை கடைச் சங்கம் போலவே
எனச் சொன்ன பாண்டித்துரைத் தேவன் சொல்லை
இவ்வையம் அந்நாளில் நம்பவே இல்லை!
(இனியுமோர் தமிழ்ச் சங்கம்)

வியந்தது வையம் சென்ற நாள் சிலவே
விரிந்தது மதுரைத் தமிழ்ச் சங்க நிலவே
அயர்ந்த தமிழரின் ஆடலும் பாடலும்
அறிவின் செயலும் மிளிர்ந்தன பலவே!
(இனியுமோர் தமிழ்ச் சங்கம்)

புலவர் வகுப்பு மூன்று படைத்தான்
புன்மையின் மடமையின் என்பை உடைத்தான்
பலதமிழிலக்கிய மாசு துடைத்தான்
பாண்டித்துரைத் தேவன் புகழ்க்கொடி எடுத்தான்!
(இனியுமோர் தமிழ்ச் சங்கம்)

ஜூலை திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்

கு.அழகிரிசாமி
(ஜூலை.5)

மயிலை சிவமுத்து
(ஜூலை.6)

இரா.இராகவையங்கார்
(ஜூலை.11)

சுவாமி விபுலானந்தர்
(ஜூலை.19)

வேதநாயகம் பிள்ளை
(ஜூலை.21)

சுப்பிரமணிய சிவா
(ஜூலை.23)

மு.கோவிந்தசாமி
(ஜூலை.23)

பதிப்பாசிரியர்: **பேரா. இரா.சதாசிவம்**

ஆசிரியர் குழு

முதுமுனைவர் திரு. இரா.இளங்குமரனார்

முனைவர் திரு. இராம.சுந்தரம்
முனைவர் திரு. ம.திருமலை
முனைவர் திரு. இ.மறைமலை
முனைவர் திரு. செ.கந்தசாமி
முனைவர் திரு. பெ.சுயம்பு
முனைவர் திரு. தி.முருகரத்னம்
முனைவர் திரு. கு.வெ.பாலசுப்பிரமணியன்
முனைவர் திரு. மு.மணிவேல்
முனைவர் திரு. ம.பெ.சீனிவாசன்
முனைவர் திரு. இ.கி.ராமசாமி
முனைவர் திரு. உ.கருப்பத்தேவன்

RNI Regd. No.5507/56 Postal Registration Number TN/MA/130/2017-19
Date of Publication 20th of Every Month
Posted at Madurai BPC on 25th of Every Month

செந்தமிழ்க் கல்லூரி

நான்காம் தமிழ்ச் சங்கம்

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

நன்கொடை கிடையாது

சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன

முனைவர் கி.வேணுகா
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க்கல்லூரி

இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
செயலாளர்
நான்காம் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை,
மதுரை - 625 001.

From
THE SECRETARY
The Fourth Tamilsangam
54, Tamil Sangam Road,
Madurai - 625 001, TAMILNADU, INDIA

பெறுநர்/T

Book Post

வெளியிடுபவர்: வழக்கு ... ச.மா... செயலாளர்
54, தமிழ்ச் சங்க ... சாலை, மதுரை - 1 ✆ 0452 - 2343707
பதிப்பாசிரியர்: இரா.சதாசிவம், 2/861, இராசராசன் தெரு, மதுரை - 20, அலைபேசி:94874 45403
அச்சகம்: செந்தமிழ் அச்சகம், 54, தமிழ்ச்சங்கச் சாலை, மதுரை- 1